விலை ரூபா 3-00

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர்: 32 வைகாசி: 29 துல் ஹஃதா: பிறை: 18 இதழ்: 120
யாழ்ப்பாணம் செவ்வாய்க்கிழமை 12-06-1990


## ஹமீத் இன்று யாழ். வருவார்?

(யாழ்ப்பாணம்)

நீதியமைச்சரும், வட-கிழக்கு சமாதானக் குழுவின் தலைவருமான ஜனாப் ஏ. சி. எஸ். ஹமீத் இன்று யாழ்ப்பாணம் வரலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

அமைச்சர் ஹமீத்திடம் விடுதலைப் புலிகள், வவுனியாவில் இலங்கை இராணுவத்தின் யுத்த நிறுத்த மீறல்களையும், மட்டக்களப்பில் நேற்று நடந்த சம்பவங்களையும் எடுத்துக் கூறலாம் எனவும் அறியக் கிடக்கிறது. (152)

பாடசாலைகளை

## நிர்மாணிப்பதற்கு கிடைத்துள்ள நிதி ஒரு வரப்பிரசாதம்! - கல்விப்பணிப்பாளர்

(நெடுந்தீவு)

'யாழ்ப்பாண மாவட்டத்துப் பாடசாலைக் கட்டடங்களை நிர்மாணிப்பதற்கு வழங்கப்பட்டுள்ள நிதி ஒரு 'வரப்பிரசாதம்' ஆகும். இதனை பயன்படுத்தி சகல பாடசாலைக் கட்டங்களையும் துரிதமாகவும் சிறப்பாகவும் கட்டி முடிக்க

(8ம் பக்கம் பார்க்க)

களுவாஞ்சிக்குடியில்

# புலிகள் - இராணுவம் மோதல்

# படையினர் தரப்பில் 14 பேர் பலி!

## மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டத்திலுள்ள பொலிஸ் நிலையங்கள் புலிகளின் கட்டுப்பாட்டில்

(நமது அலுவலக நிருபர் மணிசேகரன்)

**களுவாஞ்சிக்குடியில் விடுதலைப் புலிகளுக்கும் இலங்கை இராணுவத்தினருக்குமிடையில் நடைபெற்ற நேரடி மோதலில் இலங்கை இராணுவத்தரப்பில் 14 பேர் கொல்லப்பட்டதாக அறியவருகிறது. களுவாஞ்சிக்குடியிலிருந்து மட்டக்களப்பை நோக்கி வந்த இராணுவத்தினர் விடுதலைப் புலிகளின் பாதுகாப்பு அரணை உடைத்துக் கொண்டு வருகையில் இந்த மோதல் ஏற்பட்டதாகத் தெரியவருகிறது. நேற்றுக் காலை 10-30 மணியளவில் இச்சம்பவம் இடம்பெற்றதாகக் கூறப்படுகிறது.**

இந்தச் சம்பவத்தையடுத்து மட்டக்களப்பு நகரத்தில் சிங்களப் பொலிசாரின் அத்துமீறல் நடவடிக்கை ஆரம்பமானது. இதைத் தொடர்ந்து விடுதலைப் புலிகள் மட்டக்களப்பு நகரிலுள்ள பொலிஸ் நிலையத்தை தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்த தோடு, முந்நூறு பொலிசாரை தமது பாதுகாப்பில் வைத்துள்ளார்கள் எனவும் அறியக்கிடக்கின்றது.

மேலும் விடுதலைப்புலிகள் ஏருவூர், வாழைச்சேனை, அக்கரைப்பற்று, வெல்லாவெளி, கல்முனை, களுவாஞ்சிக்குடி ஆகிய பொலிஸ் நிலையங்களை தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்தனர்.

இச்சம்பவத்தின் நிகழ்வுகள் சம்பந்தமாக விடுதலைப் புலிகள் தலைமைப் பீடத்துக்கும், அரசாங்கத்துக்கும் இடையில் பேச்சுவார்த்தைகள் நடைபெறுவதாக அறியக்கிடக்கின்றது. [152]

## ஏழை மக்களின் வியர்வைக்கும் விசேஷ பெறுமதி உண்டு - ஜனாதிபதி

(கொழும்பு)

'பணத்துக்கும், சொத்துக்கும் மதிப்புஇருப்பது போன்று ஏழை எளிய மக்கள் சிந்தும் வியர்வைக்கும் விசேட பெறுமதி உண்டு. இதனை உணர்ந்தே எமது அரசாங்கம் செயற்பட்டு வருகிறது.'

மாத்தளை ராகலை மகாவித்தியாலயத்தில் நடைபெற்ற மாவட்ட மாநாட்டில் ஜனாதிபதி திரு. ஆர். பிரேமதாசா உரையாற்றுகையில் இவ்வாறு

(8-ம் பக்கம் பார்க்க)

போக்குவரத்து சபை

## மக்கள் வசம் மாறினாலும் பஸ் கட்டணங்கள் அதிகரிக்காது! அமைச்சர் மெண்டிஸ்

(கொழும்பு)

இலங்கை போக்குவரத்து சபை மக்கள் மயப்படுத்தப் படுவதினால், பஸ்கட்டணங்கள் அதிகரிக்கப்பட மாட்டாது. பாடசாலை பஸ்சேவைகளும் நிறுத்தப்படமாட்டாது, என போக்குவரத்து நெடுஞ்சாலை அமைச்சர் திரு விஜயபால மெண்டிஸ் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் கூறியதாவது:

மக்கள் மயப்படுத்தும் இத்

(8ம் பக்கம் பார்க்க)

## சூரிய சக்தியின் மூலம் கலங்கரைவிளக்கங்கள்!

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்திலுள்ள மண்டைதீவு, எழுவைதீவு, மெலிஞ்சிமுனை, புலியந்துறை, இன்பருட்டி, தாளையடி, நாகர் கோயில் ஆகிய கடற்றொழில் பிரதேசங்களில் கடற்றொழிலாளர்களின் நன்மைகருதி சூரியசக்தியைப் பயன்படுத்தி ஒளிவிளக்குகளுடன் கலங்கரை விளக்கங்களை அமைக்க நடவடிக்கை எடுக்கப்படவிருக்கிறது.

யாழ். மாவட்ட பன்முகப் படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்தின் கீழ் மேற்படி வேலைத்திட்டங்களுக்கு 4 லட்

[8ம் பக்கம் பார்க்க]

ஜீ. சி. ஈ. (சாதாரண) பரீட்சையில் தோற்ற

## தொழில்நுட்ப பாடத்தில் சித்திபெறுவது அவசியம்

(கொழும்பு)

ஜீ. சி. ஈ. (சாதாரண) பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்கள், 9ம் ஆண்டு வகுப்பில் தொழில் நுட்பப் பாடத்தில் சித்தி அடைய வேண்டியது கட்டாயமானது எனக் கல்வி, உயர் கல்வி அமைச்சர் திரு. அத்துலத் முதலி அறிவித்துள்ளார்.

விரைவில் நடைமுறைப் படுத்தப்படவுள்ள இப்புதிய திட்டத்தின்படி, 9ம் ஆண்டில் நடாத்தப்படவுள்ள தொழில் நுட்ப பாடப் பரீட்சையில் சித்தியடையும் மாணவருக்கு தொழில் நுட்ப பாடத் தேர்ச்சி நற்சாட்சிப் பத்திரம் வழங்கப்படவுள்ளது.

(8ம் பக்கம் பார்க்க)

சாவகச்சேரி உ. அ. அ. பிரிவிலுள்ள

## பாவனையற்ற அரச காணிகளுக்கான ஆய்வு வேலைகள் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட காணி பயன்பாட்டுத் திட்டமிடலின் கீழ் சாவகச்சேரி உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள கைதடி வடக்கு காரைப்பவெளம், கைதடி தெற்கு எம்பிட்டி, மிருசுவில் பெரியான் ஓடை, கெற்பெலி, விடத்தற்பளை போன்ற இடங்களிலுள்ள பாவனையற்றுக் கிடக்கும் அரச நிலங்களை முழுமையான பயன்பாட்டுக்கு கொண்டு வருவதற்கான ஆய்வுகள் நடைபெற்று வருகின்றன.

(8-ம் பக்கம் பார்க்க)

## சர்வதேச மன்னிப்பு சபையின் கொழும்பு அலுவலகம் மூடப்படும்

(லண்டன்)

சர்வதேச மன்னிப்புச் சபையின் ஆசியப் பிராந்தியத்திற்கான கொழும்பு அலுவலகம் இவ்வருடம் செப்டம்பர் மாதத்துடன் மூடப்படவுள்ளது.

ஆசியப் பிராந்தியத்துக்கு ஹொங்கொங்கை தலைமையகமாகக் கொண்டியங்கும் சர்வதேச மன்னிப்புச் சபையின் ஒரு அலுவலகம் கடந்த பல வருடங்களாகக் கொழும்பில் இயங்கிவந்தது.

இலங்கைக்கு நேரில் விஜயமொன்றை மேற்கொள்ளச் சர்வதேச மன்னிப்புச் சபையின் பொதுச் செயலாளர், கடந்த இரு வருடங்களாக இலங்கையிடம் அனுமதி கோரி வந்தபோதிலும் அரசு அவரது வருகைக்கு அனுமதி மறுத்துவருகிறது. அண்மைக்கால மனித உரிமை மீறல் சம்பவங்களே இதற்குக் காரணம் என்றும் கூறப்படுகிறது.

இதையடுத்து அடுத்த செப்

(8-ம் பக்கம் பார்க்க)

உலக கிண்ண

## உதைபந்தாட்டம்

(ரோம்)

இத்தாலியில் நடைபெறும் உலக கிண்ண உதைபந்தாட்டப் போட்டியில் நேற்றைய ஆட்டத்தில் வெற்றிபெற்றோர் விபரம்:

கோஸ்டரிக்கா 1-0 கோலால் ஸ்கொட்லரந்தை வென்றது.

## வரி விளம்பரம்

### தேவை

பிளேட்டின் மெஷினில் வேலைசெய்ய அனுபவமுள்ளவர் தேவை. ஆண்-பெண் இரு பாலாரும் விண்ணப்பிக்கலாம், திறமைக்கேற்ற சம்பளம் வழங்கப்படும். நேரில் சமுகந்தரவும்: தேவி அச்சகம், 114/19, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (சி 3974)

### தவறிவிட்டது

யாழ். கன்னியர் மடப் பாடசாலைக்கும் நாச்சிமார் கோவிலுக்குமிடையில் முக்கிய தஸ்தாவேஜுகள் அடங்கிய ஒரு கறுப்புநிற காரியாலய பை (Office Bag) தவறிவிட்டது. அதனைக் கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து ஈழநாடு காரியாலயத்தில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (சி 3981)

### புலமைப் பரிசில் பரீட்சை
(ஆண்டு 5)

இணுவில், சுன்னுகம், தாவடி, மானிப்பாய் (மாணவர் வசதி கருதி) யாழ்ப்பாணம் புதிய கல்வி நிலையத்தால் நடாத்தப்படும் புலமைப் பரிசில் மாதிரிப்பரீட்சை (ஏழாவது) 17-06-90 ஞாயிற்றுக்கிழமை மு. ப. 10-30 மணிக்கு எமது நிறுவனத்தினுல் நடாத்தப்படும். பெறுபேறுகள் விஞத்தாள் விளக்கம் 24-06-90 ஞாயிறு பி. ப. 3-30 மணியளவில் புதிய கல்வி நிலைய ஆசிரியரினுல் மேற்கொள்ளப்படும். முற்கூட்டியே பதிவுசெய்யவும். ''எவரஸ்ற் இன்ஸ்ரிரியூற்'' இணுவில். (சி-3980)

### வியாபாரம் பெருக விளம்பரம் செய்க

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை.

### கேள்வி அறிவித்தல்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் மருத்துவ பீட சிற்றுண்டிச்சாலையை நடாத்துவதற்காக இலங்கை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நிதியாளரினுல் 27-06-90ஆம் திகதி நண்பகல் 12-00 மணி வரை பொறியிடப்பட்ட கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படும்.

மீளளிக்கப்படும்கேள்வி வைப்புப் பணமாக ரூபா 500/-உம் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா 50/-உம் பல்கலைக்கழக நிதிக்கிளையில் செலுத்திப் பெற்றுக் கொண்ட பற்றுச்சீட்டுக்களைச் சமர்ப்பித்துக் கேள்விப்படிவங்களை இப் பல்கலைக்கழகத்தின் நலச்சேவைகள் கிளையிலிருந்து பெற்றுக்கொள்ளலாம். மேற்குறிப்பிட்ட கேள்விப் படிவங்களில் அனுப்பப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

மேலதிக விபரங்களைக் காரியாலய நேரங்களில் என்னிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

பதிவாளர்.
08-06-90
(ஏ 799)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இலங்கை.

### கேள்வி அறிவித்தல்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் பாலசிங்கம் விடுதிச் சிற்றுண்டிச்சாலையை நடாத்துவதற்காக இலங்கை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நிதியாளரினுல்27-06-90ம் திகதி நண்பகல் 12-00 மணிவரை பொறியிடப்பட்ட கேள்விகள் ஏற்றுக் கொள்ளப்படும்.

மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப் பணமாக ரூபா 500/-உம் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா 50-/உம் பல்கலைக்கழக நிதிக்கிளையில் செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டுக்களைச் சமர்ப்பித்துக் கேள்விப் படிவங்களை இப் பல்கலைக்கழகத்தின் நலச்சேவைகள் கிளையிலிருந்து பெற்றுக் கொள்ளலாம்.மேற்குறிப்பிட்ட கேள்விப் படிவங்களில் அனுப்பப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

மேலதிக விபரங்களைக் காரியாலய நேரங்களில் என்னிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

பதிவாளர்.
08-06-90.
(ஏ 800)


# பிணக்குகளை தீர்க்கவே இணக்க மன்றுகள்

(காங்கேசன்துறை)

''மக்கள் மத்தியில் ஏற்படும் சிறு சிறு பிணக்குகளைச் சமரசமாகத் தீர்த்துவைத்து மக்கள் இடையே அமைதியை ஏற்படுத்தவே தமிழீழ இணக்க மன்றுகள் அமைக்கப்படுகின்றன. இதற்கென ஏற்படுத்தப்பட்ட சட்டதிட்டங்கள், வரையறைகளுக்குள் செயல்பட்டு இம்மன்றுகள் சிறப்புற இயங்கஅனைவரும் ஒத்துழைக்க வேண்டும்,''

இவ்வாறு தெல்லிப்பழை பகுதி இணக்க மன்றுகளின் மேற்பார்வையாளர் திரு. எம். நடராசா தெல்லிப்பழை யூனியன் கல்லூரி மண்டபத்தில் நடந்த இணக்கமன்று அங்குரார்ப்பணக் கூட்டத்தில் பேசுகையில் கூறினுர்.

விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி அரசியல் பிரிவைச் சேர்ந்த திரு. கணேஷ் தலைமையில் நடந்த இக்கூட்டத்தில் தெல்லிப்பழை, வீமன்காமம், மாவிட்டபுரம் ஆகிய பகுதிகளை உள்ளடக்கிய இணக்கமன்று அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.

இணக்க மன்றுகளின் மேற்பார்வையாளர் திரு. நடராசா மேலும் பேசுகையில்: ''நீண்டகாலமாக மக்கள் தமக்கிடையேயுள்ள பிணக்குகளைத் தீர்க்கமுடியாமல் அவதியுற்றுவந்தனர். நீதிமன்றங்கள் இயங்கவில்லை. சட்ட ஒழுங்குகள் சீர்குலைந்திருந்தன. தற்போது நிலைமை ஓரளவு சீர்திருந்தியுள்ளதால் மக்கள் தமது பிணக்குகளை விடுதலைப் புலிகளிடம் சென்று முறையிடுகிருர்கள். இவற்றை எல்லாம் விசாரணை செய்து கொண்டிருக்கமுடியாது. அவர்களுக்குப் பல்வேறு பணிகள் உள்ளன. ஆகவேஇந்தஇணக்க மன்றுகள் உருவாக்கப்பட்டு வருகின்றன:

ஆரம்பக் கட்டமாகவே இம் மன்றுகள் அமைக்கப்படுவதால் எல்லாக் கிராம சேவகர் பிரிவுகளுக்கும் அமைக்கப்படவில்லை. சில கிராமசேவகர்பிரிவுகளை இணைத்தே இம்மன்றுகள் அமைக்கப்படுகின்றன. காலப்போக்கில் இவற்றின் பணிகள் விஸ்தரிக்கப்பட்டு ஒவ்வொரு கிராமத்திலும் இணக்கமன்றுகள் ஏற்படுத்தப்படும் என்ருர்.'' (86)

## மாணவர் பதிப்பு

(புங்குடுதீவு)

புங்குடுதீவு மகாவித்தியாலயத்தில் கல்வி பயின்றுவரும் பெருந்தொகையான கிறிஸ்தவ மாணவர்கள் சமய ஆசிரியர் ஒருவர் நியமிக்கப்படாததினுல் பாதிக்கப்பட்டுள்ளனர். (101)

## கந்தசுவாமி ஆலய திருப்பணிவேலை

(பண்டத்தரிப்பு)

சங்கானை மேற்கு காலையடி அருள்மிகு கந்தசுவாமி ஆலயத்தில் பல லட்ச ரூபா செலவில் திருப்பணி வேலைகள் நடைபெற்று வருகின்றன.

விநாயகப் பெருமான், ஸ்வர்ண மகாலட்சுமி, ஞானபைரவ மூர்த்தி, இடும்பேஸ்வரன் ஆகிய பரிவார மூர்த்திகளுக்கு தனித்தனி ஆலயங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன.

செப்டம்பர் மாதம் 3ம் திகதி மஹா கும்பாபிஷேகம் நடத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும், மேலும் சில திருப்பணிகள் நிறைவேறவும் மஹா கும்பாபிஷேகத்தை நடத்தவும் சுமார் ஒன்றரை லட்சம் ரூபா தேவைப்படுவதாகவும் ஆலயபரிபாலன சபையினர் தெரிவித்தனர். (72)

## பம்பாய் வெங்காயம் கிலோ 22 ரூபா

(தென்மராட்சி)

பம்பாய்வெங்காயம் தென்மராட்சி கிழக்கு ப. நோ. கூ. சங்கத்திற்கு வந்துள்ளது. ப. நோ. கூ. சங்கக் கிளைக் கடைகளில் சங்கத்தினரால் நிர்ணயித்த விலை கிலோ 22 ரூபா விற்கு விற்கப்படுகின்றது. (81)

## மக்கள் கவலை

(புங்குடுதீவு)

கடந்தபல மாதங்களாக வேலணை சாட்டி அம்மன் கோவில் பகுதிகளால் வ. பி. போ. சபைக்குச் சொந்தமான பஸ் வண்டிகள் சேவைகளை நடத்தவில்லையென மக்கள் குறைபடுகின்ருர்கள். (101)


### தேவை

நிறுவனம் ஒன்றிற்கு இரவில் பொறுப்பான பணியை செய்வதற்கு அனுபவமுள்ளவரும், பொறுப்பும் கடமை உணர்ச்சியும் உள்ள பணியாள் ஒருவர் தேவை. சகல விபரங்களுடன் 20-06-90க்கு முன் விண்ணப்பிக்கவும். விளம்பர இலக்கம் ஏ 804 மே/பா ஈழநாடு, யாழ்ப்பாணம். (ஏ 804)

### தேவை

(1) மின்தறி மெக்கானிக் (ஆண்கள்)
(2) மின்தறி மெக்கானிக் பயிலுநர் (ஆண்கள்)
(3) பொது வேலையாட்கள் (ஆண்கள்)
(4) மின்தறி நெசவாளர் (பெண்கள்)
(5) மின்தறி நெசவாளர் பயிலுநர் (பெண்கள்)

உடன் நேரில் வரவும்.

அ. ஜெறுட்
C/o கூட்டுறவு சங்க மின்தறி ஆலை
190ம் கட்டையடி, நுணுவில், சாவகச்சேரி.
(சி-3978)

### சுகாதார சேவைகள் பிராந்திய பணிப்பாளர் பணிமனை - யாழ்ப்பாணம்

1990-ம் ஆண்டு ஜூன் மாதம் 1-ம் திகதி பத்திரிகையில் கிராமோதய சுகாதார நிலையங்கள் அமைப்பதற்காக பிரசுரிக்கப்பட்ட கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் திகதி ஜூன் மாதம் 11-ம் திகதி காலை 10-00 மணியிலிருந்து ஜூன் மாதம் 13-ம் திகதி பகல் 12-00 மணிவரை நீடிக்கப்பட்டுள்ளது.

ந. கனகசபை,
சுகாதார சேவைகள்
பிராந்திய பணிப்பாளர்,
யாழ்ப்பாணம்.

11 ஜூன், 90
(ஏ803)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை.

### கேள்வி அறிவித்தல்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் கைதடி சித்தவைத்தியப் பகுதியிற் சிற்றுண்டிச்சாலையை நடத்துவதற்காக இலங்கை, யாழ்ப்பாணப் பல்சலைக்கழக நிதியாளரினுல் 27-06-90ஆம் திகதி நண்பகல் 12-00 மணி வரை பொறியிடப்பட்ட கேள்விகள் ஏற்றுக்மகாள்ளப்படும்.

மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப்பணமாக ரூபா 500/- உம் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா 50/-உம் பல்கலைக்கழக நிதிக்கிளையில் செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டினைச் சமர்ப்பித்துக் கேள்விப்படிவங்களை இப் பல்கலைக்கழக நலச்சேவைகள் கிளையிலிருந்து பெற்றுக்கொள்ளலாம். மேற்குறிப்பிட்ட கேள்விப் படிவங்களில் அனுப்பப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

மேலதிக விபரங்களைக் காரியாலய நேரங்களில் என்னிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

பதிவாளர்.
08-06-90.
(ஏ 801)


# மன்னர் செய்திகள்

(மன்னர்)

அடகுவைத்தவர்களில் தமது நகைகளை மீளப்பெறுவதற்காக 89ம் ஆண்டு மார்ச் மாதம் முதலையும் வட்டியையும் செலுத்தியவர்களுக்கு, வங்கி இதுவரையிலும் நகைகளை மீள வழங்கவில்லை.

இதனுல் அடகுவைத்தவர்கள் கஷ்டத்திற்குள்ளாகியுள்ளார்கள். தாமதத்தைத் தவிர்த்து உடன் நகைகளை வழங்குமாறு கிராம அபிவிருத்திச்சங்கங்கள் வேண்டுகோள் விடுத்துள்ளன.

### மதிய உணவு முத்திரை

மன்னரில் ஏறக்குறைய 7500மாணவர்களுக்கானமதிய உணவு முத்திரைகள் பிரிவு உதவி அரச அதிபர் அலுவலகம் ஊடாக பாடசாலைகளுக்கு வழங்கப்படவுள்ளன.

ஓர் மாணவருக்கு ஒருநாளைக்கு 3 ரூபா பெறுமதியான உணவு முத்திரைகள் வழங்கப்படும். தத்தம் மாணவர்கள் குறிக்கப்பட்ட ப. நோ. கூ. சங்கத்துக்குச் சென்று ஒரு கிழமைக்குரிய பொருட்களைப் பெறலாம். இதில் முக்கியமாக அரிசி, சர்க்கரை, பருப்பு,சிறுதானியங்கள், கிழங்கு வகைகள், தயிர், பால், காய்கறிகள் தேசிய உணவு வகைகள், மீன் முட்டைகளைப் பெறலாம். இதுசார்பாக மேலும் மன்னர் கல்விப்பணிப்பாளர் அறிவுரைகள் அடங்கிய சுற்றுநிருபம் சகல பாடசாலை அதிபர்களுக்கும் அனுப்பி உள்ளார்.

### சமாதான நீதவான் இல்லை

தலைமன்னர் பகுதி 5கிராம சேவை அலுவலர் பிரிவுகள் அடக்கிய மொத்தமாக 7000 மக்கள் வசிக்கும் ஓர் பெரிய பிரதேசமாகும். ஆனுல் இம் மக்களுக்கென ஓர் சமாதான நீதவான் இப்பகுதியில்இல்லை. இதனுல் இப்பகுதிமக்கள் காலம்கடந்த பிறப்பு, இறப்பு பதிவுகளை பதிவுசெய்வதற்கு மிகவும் சிரமப்படுகின்ருர்கள். முக்கியமாக உணவு முத்திரைக்கான சத்தியக் கடதாசி, ஏனைய அரச விடயங்களுக்குத் தேவையான சத்திய உறுதியுரைகளைப் பெறுவதற்கு இப் பகுதிமக்கள் கஷ்டப்படுகின்ருர்கள்.

இதனுல் இப்பகுதி நலன் விரும்பிகள் சமாதான நீதிவான்களை நியமனம் செய்யுமாறு அரச அதிகாரிகளை கோரியுள்ளார்கள்.

### உதவி

தலைமன்னர் பகுதியில் சிரேஷ்ட பாடசாலையாகத்திகழும் தலைமன்னர்துறை அ. த. க. பாடசாலைக்கு சீடா நிறுவனம் இரு பெரிய கட்டிடங்களை நிர்மாணிக்க முன்வந்துள்ளது.

இதனுல் இப்பாடசாலை மாணவ மாணவிகள் பெரிதும் நன்மையடையவிருக்கிருர்கள்.

# பெய்ரூட்டில் 3வாரயுத்தநிறுத்தம் முறிவடைவு

# டாங்கிகள் சகிதம் சண்டை தொடர்கிறது!

## பலர் பலியென அச்சம்

(பெய்ரூட்)

**லெபனனில் கிழக்கு பெய்ரூட்டில் முஸ்லிம் படைகளுக்கும் கிறிஸ்தவ படைகளுக்குமிடையில் கடும் யுத்தம் நடைபெற்றுவருவதாக தெரிவிக்கப்படுகிறது. கடந்த 3 வாரங்களாக அமுலிலிருந்த யுத்தநிறுத்தம் முறிவடைந்து டாங்கிகள், பீரங்கிகள் சகிதம் பெரும் யுத்தம் நடைபெறுகிறது. இதில் பலர் கொல்லப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.**

கிழக்கு பெய்ரூட்டில் பல முக்கிய நகரங்களை தத்தமது கட்டுப்பாட்டில் கொண்டு வரும் பொருட்டு சிரியாவின் ஆதரவுபெற்ற முஸ்லிம் படைகளுக்கும், கிறிஸ்தவ படைகளுக்குமிடையில் கடந்த பல வருடங்களாக பெரும் யுத்தம் நடைபெற்றுவருகிறது. இந்த யுத்தத்தில் இதுவரை சுமார் 50, 000பேர் வரை கொல்லப்பட்டுள்ளனர்.

பல லட்சம் பேர் யுத்தம் நடைபெறும் பகுதிகளைவிட்டு வெளியேறி அகதிகளாக கிராமப்புறங்களில் தஞ்சமடைந்துள்ளனர். அண்மையில இருதரப்பும் பேச்சுக்கள் நடாத்தி காலவரையற்ற யுத்தநிறுத்தத்திற்கும் உடன்பட்டிருந்தன.

எனினும் 3 வாரங்களே இந்த யுத்த நிறுத்தம் நிலைத்தது. தற்போது வீதிகளில் பெருமளவு டாங்கிகளும், பீரங்கிகளும் குண்டுகளைவீசித் தள்ளுவதுடன் ஆயிரக்கணக்கான வீரர்களும் கடும் யுத்தத்தில் ஈடுபட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இச்சண்டையில் பலர் கொல்லப்பட்டிருக்கலாமென தெரிவிக்கப்பட்ட போதிலும் கொல்லப்பட்டவர்களின் எண்ணிக்கை இதுவரை சரியாக மதிப்பிடப்படவில்லை. கட்டிடங்கள் பல சேதமடைந்துள்ளதால் இடிபாடுகளிடையேயும் பலர் சிக்குண்டிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது. [சி]

## யுத்த விமானத்தை இழுத்து சாதனை

(லண்டன்)

அமெரிக்க யுத்தவிமானமொன்றை கட்டியிழுத்து பிரிட்டிஷ்காரர் ஒருவர் உலக சாதனை ஒன்றை ஏற்படுத்தியுள்ளார்

'பி-5' ரக பொம்மர் யுத்த விமானத்தை இவர் சங்கிலியில் கட்டி உடலுடன் இணைத்து இழுத்துள்ளார். இந்த விமானம் 108 தொன் நிறையுடையது. இவர் இதனை சுமார் 2 அங்குல தூரமே இழுத்துள்ளார்.

இதன் மூலம் டேவ்கார்டர் உலகின் மிகப் பலம் வாய்ந்த மனிதன் என்ற புகழையும் சம்பாதித்துள்ளார். (து)

## தவறுனசிகிச்சைக்கு அபராதம் செலுத்தினர்

(லண்டன்)

புற்றுநோயனுல்பீடிக்கப்பட்டவர் என்று தவருக கணிப்பீடு செய்து ஒரு வருடத்துக்கு மேலாக வைத்தியசாலையிலும் ஏழு வருட காலம் வெளியிலும் சிகிச்சை பெற்று வந்ததன் மூலம், உடலியல், உளவியல் பாதிப்புக்குட்பட்ட பிரித்தானிய பெண்மணிக்கு நீதிமன்ற விசாரணையின் பின்னர் சம்பந்தப்பட்ட வைத்தியசாலை அதிகாரிகள், 155,000 பவுண் ஸ்ரேலிங் நஷ்டஈடு வழங்கவேண்டும் என்று தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது. (அ)

## முகமூடிக் கொள்ளையர் புத்தளத்தில் கொள்ளை!

(புத்தளம்)

புத்தளம் முள்ளிபுரம் வெட்டாளையில் ஜனுப் எம். ஒ. ஏ. ரசீட் என்பவர் வீட்டினுள் இரண்டு மோட்டார் சைக்கிளில் வந்த நான்கு முகமூடி அணிந்த வாலிபர்கள் புகுந்து பணம் ரொக்கமாக 31, 500 ரூபாவும், ரூபா 75,000 பெறுமதியான 14தங்கப் பவுண்களையும் துப்பாக்கி முனையில் கொள்ளையடித்து தாங்கள் வந்த மோட்டார் சைக்கிள்களிலே தப்பியோடிவிட்டார்கள்.

இவர்கள் கொள்ளைக்குப் பாவித்த மோட்டார் சைக்கிள்கள் புத்தளம்-மன்னர் ரோட் 4ம் கட்டையில் இருவரிடம் இருந்து பலவந்தமாகப்பறித்து வந்துள்ளார்கள் என்பதையும் பின்னர் அந்த மோட்டார் சைக்கிள்கள் அநாதரவாக ஒன்று புத்தளம்மரிக்கார் தெருவிலும், மற்றது கொச்சிமடு தெருவிலும் காணப்பட்டன.

கொள்ளைக் கோஷ்டியினர் மெசின்துவக்கு, றிவோல்வர், கைக்குண்டு வைத்திருந்தார்கள் என்றும் கொள்ளை நடத்தியபின் ஒரு டோர்ச் லைற். குண்டொன்று, பைக்கட் பவுடர் என்பவற்றைதவறுதலாக விட்டுச்சென்றனர்.

புத்தளம் பொலிசார் உடனடியாக சம்பவம் நடந்த இடத்திற்குச் சென்று விசாரணைகளை மேற்கொண்டதுடன் மேலதிக விசாரணைக்காக குருணுகலையிலுள்ள மேலிடத்துடன் தொடர்புகொண்டுள்ளார்கள். (154)

## வெப்ப வீச்சு 380 பேர் பலி

(மெக்ஸிக்கோ)

மெக்ஸிக்கோநாட்டில்என்றுமில்லாதவாறு வெப்ப வீச்சு தாக்குதலினுல் 380 பேர் கொல்லப்பட்டதுடன், பயிர்கள் யாவும் கருகி அழிந்துள்ளன. (அ)

## பாகிஸ்தான் இனக்கலவரம்: 450 பேர் பலி!

### இந்திய ஊடுருவலென குற்றம் சாட்டு

[கராச்சி]

பாகிஸ்தானில் சிந்து மாகாணத்தில் இடம்பெற்றுவரும் இனக்கலவரங்களில் இதுவரை 450 பேர் கொல்லப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. தற்போதும் இப்பகுதியில் கலவரம் நடைபெற்று வருகின்றது.

சிந்து மாகாணத்தில் குறிப்பாக இக்கலவரங்கள் கராச்சி, ஹைதராபாத் நகரங்களில் இடம்பெற்று வருகிறது. 'மொஹஜிர்' முஸ்லிம் பிரிவினருக்கு எதிராகவே இக்கலவரம் நடைபெறுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இக்கலவரத்தைக் கட்டுப்படுத்த இராணுவம் டாங்கிகள் சகிதம் பெருமளவு குவிக்கப்பட்டுள்ளபோதிலும் பல வன்முறைச் சம்பவங்கள் தொடர்ந்தும் நடைபெறுகிறது. கட்டிடங்கள், கடைகள், வீடுகள் அடித்து நொருக்கப்படுவதுடன், தீயிடலும் கொள்ளைகளும் இடம்பெற்று வருகிறது.

இதேவேளை இக்கலவரங்களை இந்திய இராணுவ புலனாய்வுப் பிரிவே தூண்டிவருவதாகவும் திட்டமிட்டு இரு பகுதியினரிடையே குரோத மனப்பான்மையை இப்புலனாய்வுப்பிரிவு தூண்டிவிடுவதாகவும் அரசுதரப்பில் குற்றம் சாட்டப்பட்டுள்ளதும் குறிப்பிடத்தக்கது. (சி)

## மெக்ஸிக்கோ வளைகுடாவில் நோர்வே கப்பல் எரிகிறது!

### கடலிலும் பெரும் தீ

(மெக்ஸிக்கோ நகர்)

மெக்ஸிக்கோ வளைகுடாப் பகுதியில் நோர்வே எண்ணைக் கப்பலொன்று வெடித்துச் சிதறியதில் பாரியசேதம் ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

ஆயிரக்கணக்கான தொன் எண்ணைக் கலன்களை தாங்கிச் சென்ற இக்கப்பலில் எண்ணைக் கசிவுகள் ஏற்பட்டதையடுத்து கப்பலில் நான்கு ஐந்து தீவிபத்துகள் ஏற்பட்டதாகவும் இதனுல் கப்பல் வெடித்துச் சிதறியதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

பெருமளவு எண்ணை கடலில் சிந்தியதால் பலமைல் தூரம் பெரும் தீச்சுவாலையுடன் எரிந்து கொண்டிருப்பதாகவும் இத்தீயை அணைக்கும் முயற்சியில் அமெரிக்க கப்பல்கள் ஈடுபட்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்த எண்ணைக்கப்பலில் சென்ற எட்டுக்கும் மேற்பட்ட மாலுமிகளும் கொல்லப்பட்டிருக்கலாமென்றும் தெரிவிக்கப்படுகிறது. எனினும் உதவிப்பணிகள் தொடர்ந்து மேற்கொள்ளப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (சி)

## 60 படகுகள் அன்பளிப்பு

(மன்னுர்)

நோர்வே நாட்டு அகதிகள் புனர்வாழ்வுக் கழகத்தால் அரசின் ஊடாக மன்னுர் துயர்துடைப்புச் சங்கம் 60படகுகளும், இயந்திரம், உதிரிப் பாகங்கள் வழங்கப்பட்டன.

படகு வழங்கும் வைபவம் பேசாலை புனித வெற்றிநாயகி ஆலய முன்றலில் இடம்பெற்றது. இதற்கு மன்னுர் துயர் துடைப்புச்சங்கத் தலைவரும், மாவட்டமுதல்வருமான அருட் திரு. அ. சேவியர் குரூஸ் சமூகம் கொடுத்து உத்தியோக பூர்வமாக படகுகளை மீனவர்களுக்கு கையளித்தார். (85)

## பதில் அதிபர்

(நாவற்குழி)

சாவகச்சேரி இந்துக்கல்லூரி அதிபர் திரு. க. சி. குகதாசன் யாழ். இந்துக்கல்லூரிக்கு இடமாற்றம் செய்யப்பட்டதைத் தொடர்ந்துசாவகச்சேரி இந்து பதில் அதிபராக திரு. க. சந்திரசேகரா கடமையேற்றுள்ளார். (107)

## இத்தாலி விபத்தில் யாழ். வாசி பலி

(நெடுந்தீவு)

திருநெல்வேலி தெற்கைச் சேர்ந்த சின்னத்தம்பி கணேசலிங்கம் (வயது 30) என்பவர் இத்தாலி நாட்டின் பல்மோர் நகரத்தில் ஏற்பட்ட மோட்டார் சைக்கள் விபத்தில் காலமானதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இறந்தவரின்சடலம் விமான மூலம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக இத்தாலி ஸ்தானிகர் காரியாலயம் பொலிஸ் செய்தி மூலம் அண்ணரின் குடும்பத்திற்கு அறிவித்துள்ளது. (133)

## உலகக் கிண்ணப் போட்டியில் ரசிகர்கள் கைகலப்பு !

### பொலிஸார் கடும் தாக்குதல்

[மிலான்]

இத்தாலியில் நடைபெறும் உலகக்கிண்ண உதைபந்தாட்டப்போட்டிதொடரில் நேற்று முன்தினம் மிலான் நகரில் நடைபெற்ற மே. ஜேர்மன் யூகோஸிலாவியா போட்டியில் ரசிகர்களிடையே பெரும் மோதல்கள் இடம்பெற்றுள்ளது.

போட்டி ஆரம்பமாகி 15 நிமிட நேரத்தில் மே.ஜேர்மன் அணி கோல் ஒன்றை பெற்றதையடுத்து இருதரப்பு ரசிகர்களிடையேயும் சச்சரவு ஆரம்பமாகியது. எனினும் போட்டி முடிவடையும்வரை பெரிய

(6-ம் பக்கம் பார்க்க)

### மணிவாக்கு

''தன்னடக்கமும் நல்லொழுக்கமும் மனிதனை மிருக இனத்திலிருந்து பிரித்துக் காட்டும் நற்பண்புகள்''.

— மகாத்மா காந்தி

# நமது நோக்கு

## இருட்டிலும்.... சில ஒளிக்கீற்றுக்கள்...!

இனப்பிரச்சனைத் தீர்வுக்குத் தடையாக உள்ளன சில முட்கள்:

அவற்றுள் ஒன்றுதான் அரசியல் யாப்பின் ஆறாவது திருத்தச் சட்டம்.

1983 ஆகஸ்ட் மாதத்தில், தமிழர் மீது நடாத்தப் பட்ட வன்செயல்களின் வடுக்கள் ஆறும் முன்பே, அவர்கள் மீது திணிக்கப்பட்டதுதான் இந்த ஆறாவது திருத்தச் சட்டம்.

இலங்கை பிளவு படுவதைத் தடுத்து விடலாமென்ற கனவில் அவசரமவசரமாகக் கொண்டுவரப்பட்டதே இச்சட்டம்.

பிரிவினை பற்றிக் கருத்துக்கூறுவதே குற்றம்: அக்குற்றத்திற்கு இச்சட்டம் விதித்த தண்டனை என்ன தெரியுமா?

குடியுரிமை பறிமுதல்; பாஸ்போட் பறிபோகும்; சொத்துக்கள் எடுக்கப்படும்; தொழில் செய்யும் வாய்ப்பையே இழக்க வேண்டும்.

பாராளுமன்றம், மாவட்ட சபைகள் போன்றவற்றில் உறுப்பினராகமுன் நாட்டின் ஒருமைப்பாட்டை ஆதரித்துச் சத்தியப் பிரமாணம் செய்யவேண்டும்.

இத்தனை கொடூரமான தண்டனைகள் அறிவிக்கப் பட்டதும், தமிழ்பேசும் மக்களின் உரிமைப் போராட்டம் பிசுபிசுத்துவிடும் என்றுதான் அவர்கள் கணக்குப் போட்டார்கள்.

ஆனால், நடந்தது என்ன? அரசியல் ஆருடம் பொய்த்துவிட்டது; உரிமைக்குரல் இந்தச் சட்டங்களால் உறங்கிவிடும் என்று போட்ட கணக்குப் பிழைத்துவிட்டது.

மாறாக, இச்சட்டம் தமிழ்பேசும் மக்களின் தன்மானத்திற்கு விட்ட சவாலாக அமைந்துவிட்டது.

இளைஞர்கள் பலரை உலுப்பிவிட்டு, உலகையே வியக்கவைத்த உரிமைப்போரைத் தூண்டிவிட்டது.

இச்சட்டம் ஜனநாயக அரசியல் முறைக்கே ஆப்பு வைத்துவிட்டதாக இன்று தென்னிலங்கையில் உணரத் தொடங்கிவிட்டார்கள்.

ஆனால், இச்சட்டத்தை நீக்குவதுதான் நாட்டு நலனுக்கு நல்லதென உள்மனது உறுத்தினாலும், அரசாங்கத்தை எதிர்க்க இதை ஒரு ஆயுதமாகப் பாவிக்கச் சில எதிர்க்கட்சிகள் முனைவதுபோல் தெரிகிறது.

இச்சட்டத்தை நீக்கிய சிலமணி நேரத்திற்குள்ளேயே நாடு பிளவுபட்டுவிடும் என்ற ரீதியிற் பிரசாரம் தொடர்கிறது.

மீண்டும் இனக்குரோத மாயையை உருவாக்கி அரசியல் லாபம் தேடுகிறார்களா?

இந்த வேளையில், தென்னிலங்கையில் உள்ள லிபரல் கட்சி அறிக்கை ஒன்றை வெளியிட்டிருக்கின்றது:

அந்த நீண்ட அறிக்கையிலே, இச்சட்டம் கொண்டு வரப்பட்ட சூழ்நிலை, இச்சட்டத்தின் 'கையாலாகாத் தனம்', ஜனநாயகப் பாதிப்பு, சட்டம் நீக்கப்பட வேண்டியதன் அவசியம் ஆகியன விளக்கப்பட்டிருக்கின்றன.

1983 லேயே லிபரல் ஜனநாயகக்கழகம் தென்னிலங்கையிலே ஆறாவது திருத்தச் சட்டத்திற்கு எதிராகக் குரல் கொடுத்திருந்தது.

லிபரல் கட்சி 1987 ஜனவரியில் ஆரம்பமானபோதே இச் சட்டம் நீக்கப்படவேண்டியதன் அவசியத்தைத் தனது கொள்கைத் திட்டத்தில் சேர்த்திருந்தது.

பெரிய தேசியக்கட்சியாக இல்லாவிடினும், சரியான சில கருத்துக்களைத் துணிந்து சிங்களமக்கள்முன் வைப்பதைப் பாராட்டாமல் இருக்கமுடியாது.

# ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் ஆலய மஹா கும்பாபிஷேகம்

## இன்று எண்ணெய்க் காப்பு

(பருத்தித்துறை)

இலங்கையின் விஷ்ணு ஆலயங்களில் முக்கியத்துவம் வாய்ந்ததும். புராதன புராண வரலாறுமிக்கதுமான ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் ஆலய ஸப்த (7) தள நூதன இராஜ கோபுரப் பிரதிஸ்டையும் ஸ்ரீ விஷ்ணு சூத்ர பஞ்சவிம்சதி(25) குண்ட மண்டல யாகசாலையும் அமைந்த புனராவர்த்தன சம்புரோசணமஹாகும்பாபிஷேகம் நாளை புதன்கிழமை நடைபெறுகிறது.

ஸப்பதள நூதன ராஜ கோபுர பிரதிஷ்டா நவகுண்ட பட்ச பிரதம குருவாக சிவாச்சார்ய திலகம் சிவஸ்ரீ ச. க. புருஷோத்தமக்குருக்களும், ஸ்ரீவிஷ்ணு சூத்ர பஞ்சவிம்சதி குண்டபட்ச யாகசாலை மகா கும்பாபிஷேக பிரதமகுருவாக பிரதிஷ்டா கிரியாரத்ன சிவாச்சார்ய பூஷணம் சிவஸ்ரீ ச. கணபதிசாமி இராமச்சந்திரக் குருக்களும் பணியாற்றுவார்கள்.

சுமார் 50 லட்சம்ரூபா செலவில் ஏழுதளங்களைக் கொண்டு 71 அடி உயரத்தில் நிர்மாணிக்கப்பட்டுள்ள இந்த இராஜ கோபுர வேலைகளை தமிழ்நாடு தேவகோட்டை ஸ்தபதி நா. சிவசிதம்பரமும், சங்கநிதி பதுமநிதி கட்டிடச் சிற்பவேலைகளை ஸ்தபதி கு. கந்தசாமியும் மேற்கொண்டு பூர்த்தியாக்கி உள்ளனர்.

இன்று எம்பெருமானுக்குப் பக்தர்களால் எண்ணெய்க் காப்பு சாத்தும் வைபவம் இடம்பெறும்.

அடுத்த மாதம் 27-ம் திகதி மண்டலாபிஷேக பூர்த்தி விழா இடம்பெறும். (52)

# மக்கள் கருத்து!

## ஆசிரியர் கைநூல்

அரசாங்க உத்தியோகத்தர்களுக்குரிய சட்டக்கோவைகள் தமிழில் இல்லாமை பெருங்குறையாகவே உள்ளது. குறிப்பாக அண்மைக் காலத்திற் சட்டக்கோவையிற் செய்யப்பட்ட மாற்றங்கள் பற்றிய அறிவு எம்மவருள் பெரும்பாலார்க்கு இல்லையென்றே சொல்லவேண்டும். காரணம் என்னவென்றால் சட்டக்கோவையிற் செய்யப்படும் மாற்றல்களனைத்தையும் சிங்கள மொழி மூலம் வெளியிடும் அரசினர் தமிழில் உடனுக்குடன் வெளியிட முன்வருவதில்லை. ஆங்கிலத்திலும் அவற்றைக் காலந் தாழ்த்தியே வெளியிடுகின்றனர்.

இத்தகைய சூழ்நிலையில் இலங்கைத் தமிழ் ஆசிரிய சங்கத்தின் ஊக்குதலின் பேரில் அதன் முக்கிய உறுப்பினரான திரு. எஸ். கே. சதாசிவம் ஆசிரியர்களுக்குதவும் வண்ணம் ''லீவும் புகையிரத ஆணைச்சீட்டும்'' எனும் விடயங்களை ஆசிரியர் கைநூல் எனும் நூல் வடிவில் வெளியிட முன்வந்தமை பாராட்டுக்குரியதாகும். இவ்வெளியீடு ஆசிரியர்களுக்கு பெரும் பயன் தருமாகையால் யாவரும் வரவேற்பர் என்பதில் ஐயமில்லை.

காரை

செ. சுந்தரம்பிள்ளை

# புனித அந்தோனியார் வருடாந்த உற்சவம்

(பருத்தித்துறை)

மணற்காடு புனித அந்தோனியார் ஆலய வருடாந்த திருவிழாவில் நவநாட்களின் ஆராதனைகளைப் பருத்தித்துறை பங்குத்தந்தை அருட் திரு. ஆர். எம். ஜீ. நேசநாயகம் அடிகளார் நடத்திவருகின்றார். இன்று மாலை ஆராதனை. நாளை புதன்கிழமை திருவிழாவின் கூட்டுத்திருப்பலி காலை ஒப்புக்கொடுக்கப்படும். தொடர்ந்து திருச்சொரூப சுற்றுப் பிரகாரமும். புனிதரின் ஆசீர்வாதமும் அருளப்படும். இத்திருநாளை முன்னிட்டு அந்தோனியார் விளையாட்டுக் கழகத்தின் ஆதரவில் உதைபந்தாட்டமும், கரபந்தாட்டமும் இடம்பெறும். இரவு நிகழ்ச்சியாக அன்னாவியார் பிரான்சிஸ் கிங்ஸ்லி மனோகரனால் நெறிப்படுத்தப்பட்ட 'திருஞானதீபன்' நாட்டுக் கூத்தும் இடம்பெறும். (52)

மாணவர் மலர்ச்சிக்காக...... **விஞ்ஞானம்**

## தொகுப்பு ஒட்சின்களின் பயன்கள் எவை?

தாவரங்களினால் சுரக்கப்படுகின்ற ஓமோன்கள் ஒட்சின்கள் எனப்படும். ஆனால்,

இரசாயன முறையில் தயாரிக்கப்படுகின்ற ஒட்சின்களே தொகுப்பு ஒட்சின்கள் எனப்படும். இவை விவசாயத்துறையில் பெரிதும் பயன்படுத்தப்படுகிறது.

(1) கிபரலின்; இவ் ஒட்சின் தெளிக்கப்பட்டு தாவரத்தின் வளர்ச்சி கூட்டப்படும்;

(2) இன்தோல் அசற்றிக்கமிலம் (I A A): தாவரங்களில் பூக்கள், பழங்கள்' காய்கள் விரைவாகப் பெறுவதற்கு இது உதவுகிறது. மற்றும் இதனை காய்களுக்கு தெளிப்பதனால் பருமனில் பெரிய பழங்களை தோற்றுவிக்க முடியும்.

(3) களை கொல்லிகளாக பயன்படுகிறது உதாரணம்: 2,4 - DPA, MCPA, பரக்குவைற், கமக்சின் போன்றவை பொதுவான களைகொல்லிகளாக பயன்படுகின்றது.

(4) புதியமுறை இனப்பெருக்கத்தில் (பதிவைத்தல், ஒட்டுதல்) செயற்கை ஒட்சின் பயன்படுத்தப்பட்டு மூடு படைக்கலங்கள் விரைவாக உருவாக்கப்படுகின்றது.

## நுளம்புகளை ஒழிப்பதற்கான வழிகள் எவை?

(1) கழிவுநீர்த்தேக்கங்கள், தேவையற்ற பள்ளங்கள் மூடப்படுதல்

(2) தேவையற்ற செடி கொடிகளை வெட்டி நீக்குதல்

(3) கிருமிநாசினி (D.D.T.) தெளித்தல்

(4) கழிவு நீர்த்தேக்கங்களின் மேல் எண்ணெய் ஊற்றுதல்.

இதனால் வளித்தொகுப்பு துண்டிக்கப்பட்டுகுடம்பி கூட்டுப்புழுவின் சுவாசத்துக்கு ஒட்சிசன் ($O_2$) கிடைக்காமல் அவை அழியும்.

(5) நீர்த்தேக்கங்களில் மீன் வளர்ப்பு செய்தல் இதனால் குடம்பி, கூட்டுப்புழு உணவாக உள்ளெடுக்கப்பட்டு அழியும். இத்தகைய முறை உயிரினவியல் கட்டுப்பாட்டு முறை எனப்படும்.

தி. தர்மவதனி
பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி.

# பலதும் பத்தும்

## சென்னைத் திருமணம்!

அண்மையில், சென்னையிலே ஓர் திருமணம்: மணமகனும், மணமகளும் ஈழத்தவர்கள்; வரவேற்புபசாரத்திற்கு முதல்வர் மு. கருணாநிதியே வந்து போயிருக்கிறார்: அவ்வளவு பிரபலமான திருமணம்.

திருமணம் நடத்தியவர்களுக்கு 'பிறந்தமண் பாசம். ஏதோ ஒருவகையில் தலைகாட்டியிருக்கிறது.

யாழ்ப்பாணத்து முறைப்படி தான் திருமணச்சடங்குகள் நடக்கவேண்டுமென்று சிறு ஆவல்...! எனவே இங்கிருந்து சிவாச்சாரியார் அழைக்கப்பட்டிருக்கிறார்.

முள்முருக்கு, அரசாணி, அமைப்பு, ஓமகுண்டம், கிரியைகள் எல்லாமே யாழ்பாணிதான்...!

யார் அந்தச் சிவாச்சாரியார்...? தொல்புரம் வழக்கம்பராயைச் சேர்ந்த சு. சுந்தரராசக்குருக்கள் தான்...!

## இதிலுமா திருட்டு?

அல்லைப்பிட்டியிலுள்ள எழுத்தாளர் திரு. வ. ஆறுமுகம் தான்தெல்லிப்பழைத் துர்க்கை அம்மன் பற்றி எழுதி 4-9-87ல் ஓர் பத்திரிகையில் பிரசுரமாகிய பாடலில் நான்கு வரிகள் திருட்டுப்போய்விட்டன என எமக்குத் தெரிவித்திருந்தார்.

'அந்த' நான்கு வரிகளையும் கண்டுபிடித்துள்ளோம். 1990ல் அவை மீண்டும் பிரசுரமாகியுள்ளன. இன்னொருவர் பெயரிலாயினும் மறுபிரசுரமாகிவிட்டதே... ஓர் பத்திரிகையில்...!

வாணி

# இன்று 154-ம் வருட நிறைவு தினம் தமிழ் அறிஞர்களை வளர்த்த மானிப்பாய் மெமோறியல்

யாழ்ப்பாணத்திலே தமிழ் அறிஞர்களை வளர்த்த மானிப்பாய் நகரில் ஆங்கிலேயர் காலம் தொட்டுக் கலையிலும் கலாச்சாரத்திலும்விஞ்ஞானத்திலும் விளையாட்டிலும் தனக்கென தனியிடத்தைப் பிடித்து நாடேவியந்து பாராட்டக் கூடிய அளவுக்கு உயர்ந்தோங்கி நிற்கின்ற பாடசாலையென்றால் அது மெமோறியல் ஆங்கிலப் பாடசாலைதான்.

காலத்தின் மாற்றத்தால் சில மாறுதல்கள் ஏற்பட்டாலும் தமது கல்லூரியின்கடந்த கால சாதனைகள் வரலாற்றில் முக்கிய பக்கங்களை கொண்டவையாகும்.

1836ம் ஆண்டு மிஷனரிமாரினால் ஆரம்பிக்கப்பட்டு அவர்களின் அயராது உழைப்பினால் நாளொருமேனியிலும் பொழுதொருவண்ணமாக வளர்ந்து அறிவுச் சுடரைப் பரப்பி மதப்பண்பை வளர்த்து மனிதாபிமான கருமங்களை ஊட்டி மக்களுக்கு நல்வழியைக்காட்டி புகழேணியில் உயர்ந்து கொண்டு சென்றது.

ஆங்கிலேயர் அதிபர்களாக இருந்த காலத்தில் விளையாட்டிலே மாணவர்கள் ஊக்குவிக்கப்பட்டு வெற்றி கேடயங்

(6ம் பக்கம் பார்க்க)

# மாகாணசபை திருத்தச் சட்டமூலம் உயர்நீதிமன்றத்தில் சமர்ப்பிப்பு

(கொழும்பு)

மாகாண சபைகள் –1987-ம் ஆண்டு 42-ம் இலக்க சட்டத்தில் மாற்றம் கொண்டுவருவதற்கான திருத்தச் சட்டமூலம் இலங்கை அரசியற்றிட்டத்துக்கு முரண்பட்டவிதத்தில் அமைந்துள்ளதா என்பதை ஆராய்வதற்காக, அதனை ஜனாதிபதி ஆர். பிரேமதாசா இலங்கை உயர்நீதிமன்றத்தில் சமர்ப்பித்துள்ளார்.

உத்தேச திருத்தச் சட்டமூலம் தேச நலன் கருதி மிகவும் அவசரமும், அவசியமும் வாய்ந்தது என அமைச்சரவை அத்தாட்சிப்படுத்தியுள்ளது குறிப்பிடத்தக்கது.

''மாகாண சபையின் அங்கத்தவர்கள் பதவி விலகுதல் அல்லது பதவியிழத்தல் மூலம் சபையின் நடவடிக்கைகளை தொடர்ந்து நடத்துவதற்கு அத்தியாவசியமான 'கோரம்' இல்லாத நிலை ஏற்படும்பட்சத்தில் அச்சபை கலைக்கப்பட்டதாகக் கருதப்படும்'' என உத்தேச திருத்தச்சட்டமூலத்தின் இல. 42- உபபிரிவு 5 ஏ மூலம் சட்டவலுவுள்ளதாகக் கருதப்படும்.

மேற்படி திருத்தச் சட்டமூலம் அரசியற்றிட்டத்துக்கு முரண்பட்டது அல்ல என உயர் நீதிமன்றம் அங்கீகாரம் வழங்கும்பட்சத்தில் 1988-ம் ஆண்டு இல. 2 மாகாண சபைகள் தேர்தல் சட்டத்துக்கு இணங்க மேற்படி திருத்தச் சட்டமூலம் அமுலுக்கு வருகிறது என தேர்தல் ஆணையாளர் உத்தியோக பூர்வ அறிவிப்பு வழங்கும் திகதியிலிருந்து ஒருவார காலத்தில் மாகாண சபையைக் கலைக்க வழி பிறக்கும் என சட்ட அறிஞர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர். (அ)

# பன்றிக்கு வைத்த குறி கண்ணைத் தாக்கியது

(யாழ்ப்பாணம்)

பன்றிக்கு குறிபார்த்த துப்பாக்கியின் பின்குழாய் பிரிந்து குறிவைத்தவரின் கண்ணைத் தாக்கிய சம்பவமொன்று கூழாங்குளத்தில் நடந்துள்ளது.

வவுனியா கூழாங்குளத்தில் இடம்பெற்ற இச்சம்பவத்தில் அவ்விடத்தைச்சேர்ந்த வி. அழகன் (வயது 60) என்பவரே ஒருகண் பாதிக்கப்பட்ட நிலையில் யாழ் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

சம்பவதினம், மிளகாய்த் தோட்டத்தில் தினமும் நாசம் செய்துவரும் பன்றிகளை வேட்டையாடுவதற்காக கட்டுத்துப்பாக்கியுடன் இவர் காத்துநின்றதாகவும் அங்கு வந்த பன்றியை வெடிவைக்க குறிபார்த்தபோது துப்பாக்கிக்குழாய் எதிர்பாராத விதமாக பின்பக்கமாக வெடித்துச் சிதறி கண்ணைத் தாக்கியதாகவும் காயமடைந்தவர் தெரிவித்தார் (56)

# இறைச்சிக்கோழி வளர்ப்புத்திட்டம்

(யாழ்ப்பாணம்)

சுவீடன் டயக்கோணியா நிறுவன நிதியை யாழ். அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம் மூலம் பெற்றுக் குரும்பசிட்டிக் கிராமப்பகுதியில் இறைச்சிக்கோழி வளர்ப்புக்கான அபிவிருத்தித் திட்டமொன்றை குரும்பசிட்டி சன்மார்க்கசபை நடைமுறைப்படுத்த முன்வந்துள்ளது.

இத்திட்டத்தின் கீழ் இக்கிராமத்திலுள்ள 18 வயதிற்கும் 35 வயதிற்கும் இடைப்பட்ட வறியபெண்கள் 25 பேர் தெரிவுசெய்யப்படுவர்.

இவர்களுக்கு இறைச்சிக்கோழி வளர்ப்பு முறைகள், இலாபகரமான முறையில் கோழித்தீன் தயாரித்தல் என்பனவற்றில் பயிற்சி வழங்கப்படும். ஒவ்வொருவருக்கும் தலா ஐயாயிரம் ரூபா வீதம் ஒருலட்சத்து இருபத்தையாயிரம் ரூபா இத்திட்டத்தில் வழங்கப்படவுள்ளது.

இப்பணத்தில் கோழிவளர்ப்பிற்கான வதிவிடம், ஐம்பது ஒருநாள் குஞ்சுகள், கோழித்தீன், மருந்து வகைகள் என்பன வழங்கப்படும். இத்திட்டத்தை சன்மார்க்கசபையின் விவசாயக் குழுவினர் கண்காணித்து நடைமுறைப்படுத்துவர்.

# பஸ் பிரயாணிகளிடம் முடிச்சுமாறிகள் கைவரிசை

(யாழ்ப்பாணம்)

கிளிநொச்சி பஸ்நிலையத்தில் ஒருபெண்ணிடமிருந்து ஒரு தங்கச் சங்கிலியும், மற்றொரு பெண்ணிடமிருந்து 27000 ரூபா பணமும் முடிச்சு மாறிகளினால் அபகரிக்கப்பட்டது.

நீண்டநேரம் பஸ்ஸுக்காக காத்திருந்த இப்பிரயாணிகள் பஸ்வந்ததும் நெருக்குப்பட்டு ஏறிய சந்தர்ப்பத்திலேயே இச்சம்பவம் நடைபெற்றுள்ளது.

கிளிநொச்சியிலிருந்துயாழ்ப்பாணம் புறப்பட்ட மினிபஸ் ஒன்றில் ஏறிய பிரயாணிகளில் ஒருவரான கிளிநொச்சி முறிப்பைச் சேர்ந்த சந்திரா நவரட்ணம் என்ற பெண்ணின் கைப்பையிலிருந்து பணமும், இராமநாத புரத்திலிருந்து யாழ்ப்பாணம் சென்ற பஸ் வண்டியில் இராமநாத புரத்தைச் சேர்ந்த ஒருபெண்ணிடம் தங்கச்சங்கிலியுமே அபகரிக்கப்பட்டுள்ளது. (56]

# ஸ்ரீசித்திவிநாயகர் சாந்திக மஹோற்சவம்

(யாழ்ப்பாணம்)

யாழ் கந்தர்மடம் அருள்மிகு ஸ்ரீசித்திவிநாயகர் ஆலய சாந்திக மஹோற்சவம் நேற்று ஆரம்பமானது.

இம்மாதம் 21-ம் திகதிமாலை விசேஷ ஆராதனைகள் நடைபெற்று ஸ்ரீசித்தி விநாயகப் பெருமான் இரதத்தில் பவனி வருவார்.

அடுத்தநாள் 22-ம் திகதி வெள்ளிக்கிழமை பகல் அஷ்டோத்தரத சங்காபிஷேகமும் மாலை அபிஷேகமும் நடைபெற்று உற்சவம் நிறைவு பெறும்.

## காப்டன் மில்லர் நினைவு தின ஏற்பாடு

(நெல்லியடி)

நெல்லியடி ராணுவ முகாம் தகர்ப்பின்போது வீரமரணம் அடைந்த விடுதலைப் புலிகளின் முதலாவது கரும்புலி காப்டன் மில்லர் ஞாபகார்த்தமாக விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி வடமராட்சி கலை, கலாசாரப் பிரிவினர் ஒலிப்பதிவு நாடாவொன்று வெளியீடு செய்யவுள்ளனர்.

காப்டன் மில்லரின் மூன்றும் ஆண்டு நினைவையொட்டி எதிர்வரும் ஜூலை மாதம் 6-ம் திகதி வெளியீடு செய்யப்படும் மேற்படி ஒலிபபதிவு நாடாவுக்குக் கவிஞர்களின் ஆக்க பூர்வமான கவிதைப் படைப்புகள் எதிர்பார்கப்படுகின்றன.

எனவே ஆக்க பூர்வமான கவிதைப் படைப்புகளை கலை, கலாசாரப் பொறுப்பாளர், விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி வடமராட்சி செயலகம் பருத்தித்துறை என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கும்படி மேற்படி கலாசாரப் பொறுப்பாளர் வேண்டுகோள் விடுத்துள்ளார். (55)

# மீனவ தொழிலாளர் மாநாட்டில் சமரச முடிவு

(வேலணை)

நெடுந்தீவுக்கடலில் வெளியூர் மீனவர்களுக்கும் நெடுந்தீவை பிறப்பிடமாகக் கொண்ட மீன்பிடித்தொழிலாளர்களுக்குமிடையில் இருந்து வந்த பிரச்சனைகளைத் தீர்த்து வைக்கும் முகமாக சமரச மாநாடென்று வேலணையில் உள்ள விடுதலைப்புலிகளின் மக்கள் முன்னணிக்காரியாலயத்தில் நடைபெற்றது. இம்மாநாட்டில் பிரச்சனை சமரசமாகதீர்த்துவைக்கப்பட்டது.

நெடுந்தீவில் உள்ள மீனவத் தொழிலாளர்களும் குருநகர் இழுவைப்படகு மீனவர் தொழிலாளர்களும் இம்மநாட்டில் கலந்து கொண்டனர்.

மாநாட்டில் பலபிரச்சனைகள் பற்றி பேசித்தீர்கப்பட்டது.

இருபகுதி மீனவத் தொழிலாளர்களும் சமரச ஒப்பந்தம் ஒன்றைசெய்து கொண்டபின் பின்வரும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

நெடுந்தீவு வடகடல் குருநகர் இழுவைப்படகு மீனவர்கள் தொழிலாளர்கள் திங்கள் புதன், சனிக்கிழமை ஆகிய மூன்று நாட்களிலும் நெடுந்தீவு மீனவர்கள் செவ்வாய், வியாழன், வெள்ளி ஞாயிறு ஆகிய நாட்களிலும் நெடுந்தீவின் பனங்காணி முனையில் இருந்து கிராவெட்டி முனை வரை தொழிலை மேற்கொள்ள வேண்டுமென்றும், எழுவைதீவு, நயினாதீவு, புங்குடுதீவு உட்பட்ட ஆற்றுப்பகுதி கடற்பகுதிகளில் இழுவைப்படகுத் தொழில் செய்வது (ரோலர்) இம்மாதம் 3-ம் திகதி முதல் முற்றாகத்தடை செய்யப்பட்டுள்ளது என்றும் திங்கள், புதன், சனி ஆகிய நாட்களிலும் குருநகர் மீனவர்கள் நெடுந்தீவு கிழக்குப்பக்கமாக கரையோரத்தில் இருந்து இரண்டு மையில் தூரத்துக்கு அப்பால் குறிப்பிட்டதூரம் வரை தொழில் மேற்கொள்ளப்படல் வேண்டும் என்றும் இச்செயல்பாட்டை மீறிநடந்தால் தமிழ் ஈழவிடுதலைப்புலிகளினால் கடும்நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. (75)

# பாடசாலைக்கு சுற்றுமதில்

(பண்டத்தரிப்பு)

மாதகல் நுணசை வித்தியாலயத்திற்கு சுமார் முப்பது ஆயிரம் ரூபா செலவில் சுற்றுமதில் அமைக்கப்பட்டுள்ளது. பாடசாலை அபிவிருத்திச்சங்கம் மேற்கொண்ட முயற்சியினால் இந்த சுற்றுமதில் நிறுவப்பட்டுள்ளது. மாதகல் மேற்கைச்சேர்ந்த திரு. வைத்திலிங்கம் தமது சொந்தச் செலவில் இரும்புக்கேற் ஒன்றை இவ் வித்தியாலயத்திற்கு அன்பளிப்புச் செய்துள்ளார். (72)

# "ஆறுவது திருத்தத்தைநீக்க ஆதரவு வழங்கவும்" - ஈ. பி. டி. பி.

(கொழும்பு)

அரசியலமைப்பின் ஆறுவது திருத்தச் சட்டத்தை நீக்குவதற்குச் சகல அரசியற் கட்சிகளும் ஆதரவு தெரிவிக்கவேண்டும் என்பதை வலியுறுத்தி இலங்கையிலுள்ள சகல அரசியற் கட்சிகளுக்கும் ஈ.பி.டி.பி. வேண்டுகோள் விடுத்துள்ளது.

ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகம் திரு. டக்ளஸ் தேவானந்தா சகல அரசியற் கட்சிகளுக்கும் ஆறுவது திருத்தச் சட்டத்தை நீக்குவதற்கான ஆதரவைத் தெரிவிக்குமாறு கடிதம் ஒன்று அனுப்பிவைத்துள்ளார்.

''நிபந்தனைகளற்ற, ஜனநாயகபூர்வமான வழிமுறைகள்மூலம் தேசிய இனங்களை நெருங்கிவரச் செய்வது, ஐக்கியத்தைக் கட்டியெழுப்புவது என்பதற்கு ஆறுவது திருத்தச் சட்டம் தடையாகவேயுள்ளது. தேசிய இனங்களுக்குள் நிபந்தனைகள், பலவந்தப்படுத்தல்கள், சட்டங்கள்மூலம் ஐக்கியத்தைக் கட்டியெழுப்ப முடியாது.

ஜனநாயகபூர்வமான உறவுகள் இல்லாமல் தேசிய இன ஒற்றுமை சாதிக்கப்படமுடியாது, இலங்கையிலுள்ள அரசியற் கட்சிகள் அனைத்தும் அரசியல்; சித்தாந்த வேறுபாடுகளுக்கு அப்பால் தேசிய இனங்களது ஒற்றுமைக்கான தடைகளை அகற்றுவதில் ஒருமித்த கருத்தோடு செயற்படவேண்டும்.

பாராளுமன்றத்தில் பிரதிநிதித்துவம் உள்ள கட்சிகள் ஆறுவது திருத்தச் சட்டத்தை நீக்குவதற்கு ஆதரவாக வாக்களிக்கவேண்டிய கடமையைச் செய்யவேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறோம்.

பாராளுமன்றத்தில் பிரதிநிதித்துவமில்லாத கட்சிகள் ஆறுவது திருத்தச் சட்டத்தை நீக்குவதற்கான தீர்மானத்துக்கு ஆதரவான தமது நிலைப்பாட்டை முன்வைக்கவேண்டும். அதன்மூலம் தீர்மானத்திற்கு எதிரானவர்களை அத்தகைய கட்சிகளது குறுகிய கண்ணோட்டங்களை அம்பலப் படுத்தவேண்டும்.

ஆறுவது திருத்தச் சட்டத்தை நீக்குவதற்கு ஆதரவான நிலைப்பாட்டை மேற்கொள்ளுமாறு சகல அரசியற் கட்சிகளையும் சந்தித்து ஈ.பி.டி.பி. பிரதிநிதிகள் குழு பேச்சுவார்த்தை நடாத்தஉள்ளது.

# 'யுக்தி' சஞ்சிகை நாளை வெளியீடு

(நாவற்குழி)

தென்மராட்சி அதிபர்கள் சங்கம் 'யுக்தி' என்னும் சஞ்சிகையை நாளை புதன்கிழமை வெளியிடவுள்ளது.

சாவகச்சேரி இந்துக்கல்லூரி மண்டபத்தில் நடைபெறும் இவ்வைபவத்தில் வடமாநிலக் கல்விப்பணிப்பாளர் திரு. ஆர். சுந்தரலிங்கம் சஞ்சிகையை வெளியிட்டு ஆசியுரை வழங்குவார்.

தென்மராட்சி உதவிக் கல்விப்பணிப்பாளர் ச, தனஞ்சயன், கல்வியதிகாரி பொ.சிவகுருநாதன், யாழ். இந்துக்கல்லூரி அதிபர் க. சி. குகதாசன், சாவகச்சேரி இந்துக்கல்லூரி அதிபர் க.சந்திரசேகரா ஆகியோர் சிறப்புரை வழங்கவுள்ளார்கள். விழாவிற்கான ஏற்பாடுகளை தென்மராட்சி அதிபர்கள் சங்கச்செயலாளர் திரு. இ. கணேசன் மேற்கொண்டுள்ளார். [107)

# பவளவிழா நிகழ்ச்சி

(உடுவில்)

மருதனாமடம் இராமநாதன் கல்லூரியின் 60 வது ஆண்டு நிறைவினையொட்டிய பவள விழா நிகழ்ச்சிகள் இம்மாதம் 15 ம் திகதி முதல் மூன்று தினங்களுக்கு நடாத்துவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

பவளவிழாவை முன்னிட்டு நூல் ஒன்றை வெளியிடவும் விழாக் குழுவினர் முடிவுசெய்துள்ளனர்.

முதல்நாள் நிகழ்ச்சி பொதுவாகவும் இரண்டாம் நாள் நிகழ்ச்சி பெற்றோர்- பழைய மாணவர்களாலும் இறுதி நாள் நிகழ்ச்சி பாடசாலை ஆசிரியர் மாணவர்களாலும் நடாத்தவேண்டிய ஒழுங்குகளை அதிபர் திருமதி எஸ். எஸ். குமாரசாமி செய்துள்ளார் கலை நிகழ்ச்சிகளும் விழாவில் இடம்பெறும். (109)

# இராசி பலன்

12 - 06 - 1990

செவ்வாய்க்கிழமை

மேடம்; நற்சிந்தனை, தொழிற் சிறப்பு, இலாபம்.

இடபம்: வீண்கவலை, நீசர் உதவி, பண வரவு.

மிதுனம்: தெய்வ வழிபாடு நஷ்டம், தந்திரம்.

கடகம்: பிரயாணம், செலவு, உறுதியின்மை.

சிங்கம்: சுகம், வைத்திய உதவிகள், ஆடம்பரம்.

கன்னி: பொருள் வரவு, தூரத்துச்செய்தி.

துலாம்: செல்வாக்கு, தாய் வழி உதவிகள், கௌரவம்.

விருச்சிகம்: அற்பர் நேசம் பொய் பேசுதல், தந்திரப் போக்கு.

தனுசு: சமூக சேவை, வாக்குச்சித்தி, செல்வாக்கு.

மகரம்: மனோதிடம், சாஸ்திர ஆராய்ச்சி, சுபகாரியச் செலவு.

கும்பம்: இடமாற்றம், குழப்பம்.

மீனம்: சுபச்செய்தி, ஏமாற்றம், கடின வாக்கு:

இ.மகாதேவா

# அபிவிருத்தி வேலைகள் துரிதப்படுத்த கோரிக்கை

(நமது கிளிநொச்சி நிருபர்)

கிளிநொச்சி அரச செயலகத்தில் மாவட்ட புனர்வாழ்வு, ஜனசவிய, பன்முக வரவுசெலவுத்திட்டம் சம்பந்தமான மகாநாடு தனித்தனியே அரசாங்க அதிபர் திரு. மாணிக்கவாசகர் தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் எல்லா வேலைகளையும் பூர்த்தி செய்யுமாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டது.

விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் வன்னி அரசியல் பொறுப்பாளர் திரு. சந்திரன், முன்னணியைச்சேர்ந்த திரு. சிவபாதம், மாகாண சபை பதில் செயலாளர் திரு. பத்மநாதன் ஆகியோர் உட்பட பல திணைக்களத் தலைவர்களும் கலந்துகொண்டனர். (83)

# கல்விச் சுற்றுலா

(புத்தளம்)

யா/சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியின் உயர் வகுப்பு மாணவ மாணவிகள் ஆசிரிய ஆசிரியைகள் உட்பட ஐம்பத்தைந்துபேர், கல்லூரியின் உப அதிபர் தலைமையின் கீழ் கல்விச் சுற்றுலாவொன்றை மேற்கொண்டு திருமலை, தம்புள்ளை, சிகிரியா, கண்டி, மாத்தளை, கொழும்பு ஆகிய முக்கிய நகரங்களைப் பார்வையிட்ட பின்னர், புத்தளம் ஊடாக பிரயாணத்தைமுடித்துக்கொண்டார்கள். (154)

## தமிழ் மொழி மூல ஆசிரிய கலாசாலைகள் முற்றாக புறக்கணிப்பு

### தமிழ் ஆசிரியர் சங்க மாநாட்டில் அறிக்கை

(யாழ்ப்பாணம்)

மத்திய அமைச்சின் கீழுள்ள தமிழ் மொழிமூல ஆசிரிய கலாசாலைகள் முற்றாகப் புறக்கணிக்கப்பட்டு வருகின்றமைக்கு பயிற்சிநெறிகள் குறைக்கப்பட்டுள்ளமை ஒரு சான்றாகும். தமிழ்மொழிமூல ஆசிரிய கலாசாலைகளின் எண்ணிக்கை படிப்படியாக அரசின் பேரினவாதக் கொள்கையினால் குறைக்கப்பட்டு வந்துள்ளது.

இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கப் பொதுச் செயலாளர் திரு. த. மகாசிவம் இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் பதினாறுவது ஆண்டுப் பேரவைக் கூட்டத்தில் சமர்ப்பிக்கப்பட்ட சங்கச் செயற்பாட்டு அறிக்கையில் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

இன்று ஆங்கிலம், வர்த்தகம், உடற்பயிற்சி, கைவினை, தொழில் நுட்பம், தமிழ் மொழி போன்ற பயிற்சிநெறிகள் எந்த தமிழ் மொழி ஆசிரிய கலாசாலையிலும் இல்லை.

தமிழ் மொழிமூலம் பயிற்சி நெறிகளுக்கு போதியளவு தகுதி வாய்ந்த விரிவுரையாளர் நியமிக்கப்படவுமில்லை.

ஏழு சிங்கள கல்விக் கல்லூரிகள் கட்டியெழுப்பப்பட்டு செயற்பட்டுக் கொண்டிருக்கின்றன. ஆனால் இதுவரை தமிழ்மூல கல்விக் கல்லூரிகள் அமைப்பதற்கு அத்திவாரம் போடுவதற்கான ஆக்கபூர்வ ஆரம்ப முயற்சிகளும் கூட எடுக்கப்படவில்லை.

இது அரசு தமிழர்களை எல்லா வகையிலும் பாரபட்சம் காட்டிப் புறக்கணிக்கின்றது என்பதற்கு மற்றுமொரு நல்ல உதாரணமாகும். (153)

## "உடல், உள வளர்ச்சி மூலம் சிறந்த கல்வியை பெறலாம்"

(மட்டக்களப்பு)

"கல்வியில் சிறப்பான இரண்டு அம்சங்கள் உண்டு. மாணவர்களின் ஆற்றலுக்கு ஏற்றவிதத்தில் அவர்களை உருவாக்குதல் ஒன்று. அதற்குரிய சந்தர்ப்பங்களை அவர்களுக்கு அளித்தல் மற்றையது".

இவ்வாறு அரசடி மகா வித்தியாலய வருடாந்த விளையாட்டுப் போட்டியில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றிய வடக்கு-கிழக்கு மாகாணக் கல்வியமைச்சின் செயலாளர் திரு. ஈ. ஜே. சற்குணராசா கூறினார்.

மட்டக்களப்பு இந்துக் கல்லூரி மைதானத்தில் அதிபர் கு. சௌந்தரராசா தலைமையில் நடைபெற்ற மேற்படி விளையாட்டுப் போட்டியில் திரு. சற்குணராசா தொடர்ந்து பேசியதாவது:-

"வெறுமனே ஏட்டுக் கல்விக்கு மட்டும் மதிப்பளிக்கக் கூடாது. உடல் வளர்ச்சியின் மூலமும் சிறந்த கல்வியைப் பெறமுடியும். எனவேதான் கல்வியுடன் விளையாட்டும் இணைக்கப்பட்டுள்ளது".

இவ்விழாவில் சிறப்பு விருந்தினராக மட்டக்களப்பு மாவட்டக் கல்விப் பணிப்பாளர் திரு. கு. சோமசுந்தரம் கலந்துகொண்டார். (121)

## "இளம் தலைமுறையினரிடையே சமயப்பற்று இன்று வளர்ச்சிபெற்று வருகிறது"

(உடுவில்)

இளம் தலைமுறையினரிடையே இன்று சமயப்பற்று வளர்ச்சியடைந்துவருகின்றது. சமயத் தொண்டுகள் புரிவதில் பல இளைஞர்கள் முன்னின்று உழைப்பதைக் காணமுடிகின்றது. முன் எப்போதும் இல்லாதவகையில் சிறுவர்கள் கூட்டுப் பிரார்த்தனை நிகழ்ச்சியில் அமோகமாகக் கலந்துகொள்கின்றார்கள். கூட்டுப் பிரார்த்தனையின் பரிணமிப்பு இளைஞர்கள், சிறுவர்களிடையே சமய வளர்ச்சியையும், முன்னேற்றத்தையும் தோற்றுவிக்க வழி செய்யும்".

இவ்வாறு யாழ்ப்பாணம் பல்கலைக்கழக விரிவுரையாளர் திரு. கனகசபாபதி நாகேஸ்வரன் இணுவிலில்நடைபெற்ற பரிசளிப்பு விழாவொன்றில் பேசுகையில் கூறினார்.

இணுவில் ஸ்ரீ பரராஜசேகரப் பிள்ளையார் கோவில் மகோற்சவத்தை முன்னிட்டு மேற்படி தேவாலயப் பண்ணிசைவளர்ச்சிக் குழு நடத்திய பண்ணிசைப் போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசளிப்பு விழாவிலேயே அவர் உரையாற்றினார்.

இணுவில் சைவப்பிரகாச மகா வித்தியாலய முன்னாள் அதிபர் வை. கதிர்காமநாதன் கூட்டத்திற்குத் தலைமை வகித்தார்.

விரிவுரையாளர் கனாசபாபதி நாகேஸ்வரன்தொடர்ந்து கூறியதாவது:-

"நாதத்துக்குத் தலைவனான நமது கடவுளுக்கு நாவினால் நாம் இசைக்கும் இசை இன்பத்தைக் கொடுக்கும். சைவ சமயத்தின் முக்கிய சாதனங்களுள் இசையும் ஒன்றாகும். அதிலும் பண்ணிசை பண்ணோடு பாடப்படுவது கேட்பதற்கு இனிமை தரவல்லது. இளைஞர்கள் இனிமைதரும் பண்ணிசையை ஒதுக்கிவிட்டு மேல்நாட்டு இசைகளில் மோகம்கொள்வது விரும்பத்தக்கதல்ல. ஒரு காலத்தில் மேல்நாட்டு இசைக்கு மதிப்பளித்த இளைஞர் கூட்டம் இன்று பண்ணிசையின் பெருமையையும், சுவையையும் உணரத் தொடங்கியுள்ளது. இதனால்தான் இன்று சகல கோவில்களிலும் பண்ணிசைகளும், திருமுறைகளும் ஓதப்பட்டுப் புத்தொளியுடன் விளங்குகின்றன.

ஒவ்வொரு கிராமங்களிலும் உள்ள ஆலயங்களிலும் சமய வளர்ச்சிக் குழுக்கள் செயற்பட்டு இளம் தலைமுறைக்குச் சமய நம்பிக்கையையும், உற்சாகத்தையும் ஊட்டிச் சமயத்தின் வளர்ச்சிக்காகப் பாடுபடவேண்டும்".

நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிய ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் பண்ணிசைப் போட்டிகளில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கான பரிசில்களை வழங்கி உரையாற்றும்போது கூறியதாவது:-

"சைவமும் தமிழும் வளர்ச்சியடைய இளைஞர்களின் பங்கு அவசியமானது. சிறுவர்கள் பண்ணிசை பயில முன்வந்திருப்பது சமய வளர்ச்சியின் ஒரு மைல்கல்லாகும். சைவம் தழைத்தோங்க இதுபோன்ற ஊக்குவிப்புக்களைச் சைவப் பெரியோர்கள் நடத்தவேண்டும்".

பண்ணிசை வளர்ச்சிக் குழு ஸ்தாபகர் திரு. மா. இராசரத்தினத்திற்கு ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் பொன்னாடை போர்த்திக் கௌரவித்தார்.

யாழ். பல்கலைக்கழக நுண்கலைப்பீட விரிவுரையாளர் திரு. என். வி. எம். நவரத்தினம், கோப்பாய் ஆசிரிய கலாசாலை விரிவுரையாளர் திரு. என். வீரமணி ஐயர், பண்டிதர் இ. திருநாவுக்கரசு, திரு. சபா ஆனந்தர் உட்படப் பலரும் உரையாற்றினர். (109)

## "புதியனவற்றைக் கற்று மேலதிகஅறிவுபெறவேண்டும்"

### ஆசிரியர்களுக்கு 'சுந்தர்' அறிவுரை

(நாவற்குழி)

"ஆசிரியர்களின் பாடத் திட்டத்தில் உள்ளதைவிட புதியனவற்றை யெல்லாம் கற்று மேலதிக அறிவுபெற்று பாடங்களில் எழுச்சியடைய வேண்டும்" என்று வடமாநில கல்விப்பணிப்பாளர் திரு. இரா. சுந்தரலிங்கம் பாட இணைப்பாளர்களுக்கான முகாமைத்துவப் பயிற்சி நெறியின் ஆரம்ப வைபவத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையில் கூறினார்.

கல்வி அதிகாரி திரு என். தணிகாசலம்பிள்ளையின் தலைமையில் வேம்படி மகளிர் கல்லூரியில் நடைபெற்ற இவ்வைபவத்தில் திரு. சுந்தரலிங்கம் தொடர்ந்து பேசுகையில்; அதிபர்களும், ஆசிரியர்களும் வகுப்பறைக் கற்பித்தலில் திறம்பட செயல்படவேண்டும். இன்று பல ஆசிரியர்கள் முதலாம் தவணையில் கற்பிக்க வேண்டியதை 2-ம் தவணையிலும், 2-ம் தவணையில் கற்பிக்கவேண்டியதை 3-ம் தவணையிலும் 4-ம் தவணை இல்லாததால் 3-ம் தவணை கற்பிக்கப்படாமலும் விட்டுவிடுகிறார்கள். அதனால் பல மாணவர்கள் தங்கள் ஆரம்ப அறிவைப் பெறாமல் அடிப்படை அறிவு அற்ற நிலையில் வகுப்பேற்றப்படுகிறார்கள். இந்த நிலையை மாற்றியமைக்க இங்கு பயிற்சி பெறும் பாட இணைப்பாளர்கள் ஆசிரியர்களுடன் இணைந்து நல்ல முறையில் கற்பித்தல் நடைபெற செயற்படவேண்டும்.

சில பாடசாலைகளில் சில ஆசிரியர்கள் தெளிவற்ற நிலையில் இருக்கிறார்கள். அவற்றை எல்லாம் பாட இணைப்பாளர் மேற்பார்வைசெய்து பாட நேரம் அல்லாத நேரத்தில் அந்த ஆசிரியர்களுக்கு ஆலோசனை வழங்கவேண்டும். பாட நேரங்களில் பாட இணைப்பாளர்கள் வகுப்பிற்கு பின்னாலிருந்து அவதானித்து பாட மேம்பாட்டிற்கு உதவுவதுடன் பாடசாலை வளர்ச்சிக்கும் உதவவேண்டும்" என்றார்.

தலைமைவகித்துப் பேசிய கல்வி அதிகாரி திரு. என். தணிகாசலம்பிள்ளை; "கல்விச் சேவையில் ஈடுபட்டிருக்கும் எமக்கு இவ்வாறான முகாமைத்துவப் பயிற்சி மிகவும் அவசியமானதாகும். இதனை உணர்ந்தே எமக்கு தேசிய கல்வி நிலையத்தினால் இப்பயிற்சி அளிக்கப்பட்டது. ஆசிரியர்களாகிய நாம் பாடசாலை நேரத்தில் ஒரு மணித்தியாலத்தைக்கூட வீணடிக்கக்கூடாது. அதனால்தான் இந்த பயிற்சி நெறியைக்கூட லீவு காலங்களில் நடத்துகிறோம். இந்த முகாமைத்துவப் பயிற்சி நெறியை நடத்துவதற்காக தனியாக ஒரு முகாமைத்துவ நிலையம் அமைத்து வருடம் முழுவதும் காலா காலங்களில் பயிற்சிகள் நடத்தப்படும்" என்றார்.

கொக்குவில் இந்துக்கல்லூரி அதிபர் திரு. ஏ. பஞ்சலிங்கம் பாடசாலை முகாமைத்துவ குழுக்களின் கடமைகள் தேவைகள், அமைப்புக்கள், விரிவுரைகள் பற்றி பயிற்சியாளர்களுக்கு எடுத்துரைத்தனர். (107)

## பருத்தித்துறை நகர மறுசீரமைப்பு

(பருத்தித்துறை)

பருத்தித்துறை நகர மறுசீரமைப்பு வேலைகள் இடம்பெறும் பகுதிகளில் காணிகளை வாங்குவோருக்கு பருத்தித்துறை நகர மறுசீரமைப்புக் குழு ஆலோசனை வழங்கியுள்ளது.

இந்நகர மறுசீரமைப்புக்காக சில காணிகள் தேவைப்படும் என எதிர்பார்க்கப்படுவதால் இந்நகர மறுசீரமைப்புப் பகுதியில் நிலங்கள், காணிகளைக்கொள்வனவு செய்வோர் இந்நிலங்கள், காணிகள் நகர மறுசீரமைப்பு வேலைப்பகுதிக்குள் உட்பட்டிருக்கின்றதா என்பதை அறிந்துகொள்வதற்காக நகர மறுசீரமைப்புக்குழுவுடன் தொடர்புகொண்டு ஆலோசனைகளைப் பெற்றுக் கொள்ளுமாறு பருத்தித்துறை நகர மறுசீரமைப்புக்குழு பருத்தித்துறை நகரமக்களுக்கு அறிவித்துள்ளது. (52)

## ரூபவாஹினியில் உலக கிண்ணப் போட்டி

(கொழும்பு)

இத்தாலியில் தற்போது ஆரம்பமாகியுள்ள 14-வது உலகக் கிண்ண உதைபந்தாட்டப் போட்டிகளின் நேரடி ஒளிபரப்பு இம்மாதம் 30ம் திகதியிலிருந்து அடுத்த மாதம் 8ம் திகதிவரை இலங்கை ரூபவாஹினியில் காண்பிக்கப்படவுள்ளது.

இப்போட்டியின் நான்கு கால் இறுதியாட்டங்களும் இம்மாதம் 30ம் திகதி முதல் அடுத்த மாதம் 1ம் திகதிவரை நடைபெறும். அடுத்த மாதம் 3ம், 4ம், திகதிகளில் நடைபெறும் இரு அரை இறுதி ஆட்டங்களும் பின்னர் 8ம் திகதி நடைபெறும் இறுதி ஆட்டமும் (மொத்தமாக ஏழு ஆட்டங்களும்) இம்மாதம் 30ம் திகதி முதல் அடுத்த மாதம் 8ம் திகதிவரை தினமும் இரவு 8 மணிக்குப் பின்னர் 'ரூபவாஹினி'யில் ஒளிபரப்பப்படும். (வி)

## சுகாதாரக் கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

பச்சிலைப்பள்ளி ப. நோ. கூ. சங்க ஊழியர்களுக்கான சுகாதாரக் கருத்தரங்கு கடந்த சனிக்கிழமை பளையிலுள்ள சங்க மண்டபத்தில் நடைபெற்றது.

பச்சிலைப்பள்ளி ப. நோ. கூ. சங்கத்தலைவர் திரு. ஏ. பி. ஜோர்ஜ் தலைமையில் நடைபெற்ற மேற்படி கருத்தரங்கில் பதினான்கு கிளை முகாமையாளர்களும் ஊழியர்களும்கலந்து கொண்டனர்.

யாழ். மாவட்ட உணவு மருந்து பரிசோதகர் திரு. ரி. மகாதேவா கிளிநொச்சி சுகாதாரக் கல்வி அதிகாரி திரு. எஸ். இராஜேந்திரம், பளை பொதுச் சுகாதாரப் பரிசோதகர் திரு. ஆர். எல். சேவியர் ஆகியோர் இக்கருத்தரங்கில் உரையாற்றினார்கள். (153)

## உலகக் கிண்ணப்

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

கலவரம் எதுவும் இடம்பெறவில்லை.

மே. ஜேர்மன் அணி 4-1 என்ற வித்தியாசத்தில் வெற்றிபெற்றது. ஆட்டம் முடிவடைந்த பின் விளையாட்டரங்கில் இருதரப்பு ஆதரவாளர்களிடையேயும் பெரும் கைகலப்பு இடம்பெற்றது.

இதனால் சுமார் 30 பேர் படுகாயமடைந்தனர். மைதானத்தில் காவலில் ஈடுபட்டிருந்த பொலிஸார் கண்ணீர்புகை குண்டுகளை வீசியும் பலத்த தாக்குதல்களை மேற்கொண்டும் கைகலப்பைக் கட்டுப்படுத்தினர்.

இதேவேளை இங்கிலாந்து ஆதரவாளர்கள் பலர் முன் எச்சரிக்கைகாரணமாகநேற்று கைது செய்யப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (சி)

## இன்று 154-ம்

(4ம் பக்கத் தொடர்ச்சி)

களைப் பெற வழிவகுக்கப்பட்டது. அவர்களை எடுத்து அதிபராக வந்த எஸ். வி. அழகரத்தினம் தலைமைப்பீடத்தில் இருந்தபோது நாடுமுழுவதுமே மெமோறியல் பாடசாலையின்வளர்ச்சியையும் உயர்ச்சியையும் அறிந்து கொண்டது. இவரின் காலத்தில் சகல பாடசாலைப் பரீட்சைகளிலும் எமது பாடசாலை மிகத்திறமையான சித்திகளைப் பெற்று கல்வியிலும் மேம்பட்டு ஒரு முன்னணியான இடத்தைப் பிடித்துக்கொண்டது.

இக்கல்லூரியின் வரலாற்றில் எஸ். வி. அழகரத்தினம், சுந்தரதாஸ் ஆகியோர் ஆற்றிய சீரான சேவைகளினால் நாடு முழுவதுமே மெமோறியல் பாடசாலையின் வளர்ச்சியையும் அறிவின் உயர்ச்சியையும் கண்டு கொண்டது.

சென்ற வருடம் ஓய்வு பெற்ற முன்னாள் அதிபர் வி. பொன்னுத்துரையின் சேவையை மாணவர்கள் மறந்துவிடப்போவதில்லை.

அன்று தொட்டு இன்று வரை இந்த நாட்டுக்கு அறிஞரையும் கலைஞரையும், கவிஞரையும் இன்னும் இன்னோரன்ன அறிவுப் பெருமக்களையும் ஆக்கித்தரும் கல்லூரி நம் கல்லூரியாகும்.

இப்படியாக நூற்றி ஐம்பத்தைந்து வருடங்களாகச் சீரோடும் சிறப்போடும் மிளிர்ந்து வரும் மானிப்பாய் மெமோறியல் 155 வயதை அடைந்திருக்கும் இப் பொன்னான நாளில் நம் கல்லூரியின் பெருமையை எல்லோரும் பாராட்டுவோமாக.

அ. நிக்ஷன்

# பஸ்சேவை இல்லை
## பிரயாணிகள் பாதிப்பு

[பண்டத்தரிப்பு]

யாழ்ப்பாணம்-கீரிமலை 788 இலக்க பஸ் சேவை கடந்த பல வாரங்களாக நடைபெறுததினுல் இளவாலை, பண்டத்தரிப்பு, பெரியவிளான், தொட்டிலடி ஆகிய இடங்களைச் சேர்ந்த பஸ் பிரயாணிகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இதன்காரணமாக அரசாங்க ஊழியர்களும், கல்லூரி மாணவர்களும் யாழ். நகருக்கு இலகுவாகப் பிரயாணம் செய்ய முடியாது கஷ்டப்படுகின்றனர். இப்பாதை வழியாக தனியார் மினி பஸ்கள் சேவையிலீடுபடுகின்றபோதிலும் அளவுக்கதிகமான பிரயாணிகளை ஏற்றிச் செல்வதால் பிரயாணிகள் மிகுந்த சிரமமடைகின்றனர். மாலை ஏழு மணியுடன் இந்த மினி பஸ்கள் தங்கள் சேவையை நிறுத்திக்கொள்வதால் தூர இடங்களிலிருந்து யாழ். பஸ் நிலையத்திற்குவரும் இப்பகுதிபிரயாணிகள்போக்குவரத்து வசதிகளின்றி அல்லல்படவேண்டியுள்ளது.

இது இவ்வாறிருக்க யாழ்ப்பாணம்-மாதகல் 787 இலக்க பஸ் சேவையும் சீர்கெட்ட நிலையிலுள்ளது. கடந்த சில வாரகாலமாக வடபிராந்திய போக்குவரத்துச் சபையின் பஸ் சேவைகள் எதுவும் 787 இலக்க பாதை வழியாக நடைபெறவில்லை. (72)

# "இன்றைய இளைஞர்களுக்கு தொழிற்கல்வி அவசியம்"

(நெடுந்தீவு)

"தொழிற்கல்வி இன்றைய தலைமுறையினருக்கு இன்றி அமையாததாகும். தொழிற்கல்வியைப் பெற்றுக்கொண்டவர்க்கு வேலையில்லை என்ற பேச்சுக்கே இடமில்லை',.

இவ்வாறு அகில உலக 'கெயர்' ஸ்தாபனத்தின் வடபகுதிப் பொறுப்பதிகாரி திரு. எம். பத்திநாதர் மாங்குளம் தென்இந்திய திருச்சபையின் தச்சு தொழிற்பயிற்சி கூடத்தைத் தொழிற்பயிற்சிக்காக திறந்துவைத்து உரையாற்றும்போது தெரிவித்தார்.

தென்இந்திய திருச்சபையின் மாங்குள சேகரத்தின் பதில்குரு அருட்திரு. பி ஆர். நரேந்திர அனுகூலன் தலைமையில் நடைபெற்ற இத்திறப்புவிழாவில் திரு. எம். பத்திநாதர் மேலும் உரையாற்றுகையில்:

"முல்லைத்தீவு மாவட்டத்தில் அமைந்துள்ள ஒரே ஒரு தொழிற்பயிற்சிகூடம் இதுவாகும். இம்மாவட்ட இளைஞர்கள் இச்சந்தர்ப்பத்தைப்பயன்படுத்தி பயனடைய வேண்டும். அகில உலக 'கெயர்' மாங்குள தென் இந்திய திருச்சபையின் அனுசரணையுடனேயே இத் தொழிற்பயிற்சி நிலையம் நிறுவப்பட்டுள்ளது. இரண்டரை மாத காலம் பயிற்சிபெறும் இளைஞர்களுக்கு நாளாந்தம் ரூபா முப்பது ஊக்குவிப்புப் பணமும் பயிற்சியை சிறப்பாக நிறைவேற்றிய பின்னர் சுமார் ஆயிரம் ரூபா பெறுமதியான மரவேலை செய்வதற்கான உபகரணங்களும் வழங்கப்படும்' சிறந்து விளங்கும் பயிற்சியாளருக்கு மேலும் பயிற்சியும், வேலைவாய்ப்பும் பெற்று வழங்கப்படும்" என்றார். (133)

# கசிப்பு விற்பனை முற்றாகத் தடை

(பண்டத்தரிப்பு)

வலிகாமம் மேற்கு பகுதியில் சட்டவிரோத கசிப்பு விற்பனையும், சட்டவிரோத கள் விற்பனையும் நிறுத்தப்பட்டுள்ளது.

தமிழீழ விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி விடுத்த எச்சரிக்கையை அடுத்து இப்பகுதியில் கசிப்பு உற்பத்தியும் விற்பனையும் தற்போது நிறுத்தப்பட்டுள்ளது. (72)

# நாளை உற்சவம்

(பண்டத்தரிப்பு)

மாதகல் புனித அந்தோனியார் ஆலய வருடாந்த உற்சவம் கடந்த 4-ம் திகதி ஆரம்பமானது. நாளை புதன்கிழமை காலை திருப்பலி பூசையுடன் உற்சவம் நிறைவு பெறும். மாதகல் பங்குத்தந்தை அருட்திரு. ரெஜி இராஜேஸ்வரன் அடிகளார் நிறைவேற்றுவார். (72)

# புத்தளம் இந்து மகாவித்தியாலயம்

(புத்தளம்)

புத்தளம் கொத்தணிப்பாடசாலைகளின் விளையாட்டுப் போட்டி அண்மையில் சென்ற் அன்றூஸ் மகாவித்தியாலயத்தில் நடைபெற்றது. இப்போட்டியில் ஏழு கல்லூரிகள் பங்குபற்றின.

புத்தளம் தமிழ்மகாவித்தியாலயத்திலிருந்து பங்குபற்றிய மாணவர்களுள் செல்வன்பத்மராசா, செல்வன் சிவபாலன், செல்வன் ஸ்ரீதரன் ஆகிய மூவரும் 3000 மீற்றர், 8000 மீற்றர் உயரம் பாய்தல் ஆகிய போட்டிகளில் முதலாம் இடங்களையும், செல்வன் பாலதேவன், செல்வன் ஸ்ரீகரன் ஆகிய இருவரும் குண்டெறிதல், உயரம் பாய்தல் ஆகிய போட்டிகளில் இரண்டாம் இடங்களையும் பெற்றனர். (154)

# இப்படியும் நடக்கிறது

இம்மாத ஆரம்பத்தில் திருகோணமலையில் தமிழ்த் தின விழா நடைபெற்றது நீங்களும் அறிந்ததே.

விழாவில் வடக்கு, கிழக்கு மாகாணங்களிலிருந்து சென்ற பல பாடசாலைகளின் போட்டி நிகழ்ச்சிகள் இடம்பெற்றதும் நீங்கள் தெரிந்ததே.

இவை. நீங்கள் தெரிந்து கொண்ட செய்திகள்; அறியாத செய்தி–

போட்டியில் கலந்து கொண்ட வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி மாணவிகளின் வில்லிசை நிகழ்ச்சி புறக்கணிக்கப்பட்ட துயரச் செய்தி!

திருமலை தமிழ்த் தினவிழாவில் கலந்து கொண்ட வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி மாணவிகளின் வில்லிசை நிகழ்ச்சி எப்படி இருந்தது? "அற்புதமாக இருந்தது!" என்று சொன்னவர்கள் நாங்கள் அல்ல. பார்வையாளர்கள் மட்டுமின்றி முதலிடத்துக்கு வந்து வெற்றிபெற்ற குழுவினரே புகழாரம் சூட்டியுள்ளனர்!

"உங்கள் நிகழ்ச்சி மிக அற்புதம். ஆனல் எமக்கு ஒரு குருட்டு அதிர்ஷ்டம் அடித்து விட்டது" என்று மனம் திறந்து பாராட்டியுள்ளனர். ஆனல் கிழக்கு மாகாண மத்தியஸ்தர்கட்கு மட்டும் ஏனோ தெரியவில்லை. பிடிக்கவில்லை!

'ரூபவாஹினி' நிகழ்ச்சியில் கலந்து கொண்டு, பல கல்விமான்களினுலும், பிரமுகர்களினுலும் பாராட்டப்பட்ட மேற்படி மாணவிகளின் வில்லிசைநிகழ்ச்சி தமிழ்த் தினவிழா மத்தியஸ்தர்களுக்கு மட்டும் ஏன் கசந்தது? ஏன் இந்தக் காழ்ப்புணர்ச்சி?

தமிழன் தலைநகரமாம் திருமலையில், தமிழன் தன் மொழிக்காக எடுத்த தலைசிறந்த விழாவில் அந்த இந்து மகளிர் மாணவிகள் தூக்கி எறியப்பட்டதற்குக்காரணம்... (பச்சையாகத்தான் கேட்கின்றோம்)... 'வடமராட்சியின் மூளை வளத்தை'ப்பற்றி அந்த வில்லிசையில் மிகவும் உயர்வாகக் கூறியதுதானு...?

உங்கள் மனச்சாட்சியிடமே இதனை விட்டு விடுகின்றோம்!

'ஊடுருவி'

# "சனசமூகநிலையங்களின் சேவை மகத்தானது"

(வட்டுக்கோட்டை)

"இன்றைய காலகட்டத்தில் சனசமூக நிலையங்கள் பொது மக்களுக்குச் செய்யவேண்டிய சேவைகள் ஏராளமாகவுள்ளன. எந்தெந்த நேரத்தில் என்னென்ன சேவைகளைச் செய்யவேண்டுமோ அவற்றைச் செய்யப் பொதுஸ்தாபனங்கள் பின்நிற்கக்கூடாது. பொதுஸ்தாபனங்களில் அங்கம் வகிப்போரும் இவற்றை நன்குணர்ந்துகொண்டு சேவையாற்ற முன்வரவேண்டும்"*.

சங்கானை உதவி அரசாங்க அதிபர் பிரிவு சனசமூக நிலையங்களின் சமாஜச் செயற்குழுக் கூட்டம்சுழிபுரம் பிரதேச சபை பொதுநூலகத்தில் நடைபெற்றபோது தலைமையுரை நிகழ்த்திய சமாஜத் தலைவர் திரு. ப. சிவலோகநாதன் மேற்கண்டவாறு கூறினுர்.

சமாஜ உப தலைவர் திரு ந. சிவரஞ்சன் உரையாற்றும் போது, "பொதுச் சேவையில் ஈடுபடுபவர்கள் தன்னலம் கருதாதவர்களாகவும், நேர்மை தவருதவர்களாகவும் இருக்க வேண்டும். இத்தகையவர்கள் செய்யும்சேவையில் அநீதி இருக்காது" என்ருர்.

வட்டுக்கோட்டை காந்திஜி சனசமூக நிலையத் தலைவர் திரு. அ முருகவேள், பண்ணுகம் ஸ்ரீமுருகன் சனசமூக நிலைய சேவா வாலிபர் சங்க உப தலைவரும், சமாஜப் பொருளாளருமான திரு. அ. கருணுகரன் ஆகியோர் உட்பட மற்றும் பலரும் உரையாற்றினர்.

இககூட்டத்தில் பின்வரும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன:-

* தொல்புரம் கமநலசேவை நிலையத்திலிருந்த கால்நடைகளுக்குச் செயற்கை முறையில் சினைப்படுத்தும் உத்தியோகத்தர் மாறிச் சென்றபின் இதுவரை இன்னெருவர் நியமிக்கப்படவில்லை. இதனுல் கால்நடை வளர்ப்புப் பாதிப்படைந்துள்ளது. எனவே உடனடியாகக் கால்நடைகளுக்குச் செயற்கை முறையில் சினைப்படுத்தும் உத்தியோகத்தர் நியமிக்கப்படவேண்டும்.

* யாழ்ப்பாணம் முதல் பொன்னுலை வரையுள்ள பகுதிகளிலுள்ள அணைக்கட்டுகளுக்கு நீரடைப்புக் கதவுகள் இல்லை. உடனடியாகப் புனரமைப்புச் செய்யப்படவேண்டும்.

* சங்கானை உதவிஅரசாங்க அதிபர் பிரிவுக்குட்பட்ட சனசமூக நிலையங்களுக்கிடையே கட்டுரை, பேச்சுப் போட்டிகளை நடத்துதல்வேண்டும்.

* போக்குவரத்து ஒழுங்கு விதிமுறைகள் பற்றிய கருத்தரங்குகளை நடத்துதல்வேண்டும்.

சமாஜச் செயலாளர் சைவப் புலவர் நா. க. தங்கரத்தினம் நன்றி கூறினுர். (139)

# உலக கிண்ண உதைபந்தாட்டம்
# பிரேஸில் - ஜெர்மனி கோஷ்டிகள் இலகுவாக வெற்றி பெற்றன

[ரோம்]

இத்தாலியில் நடைபெறும் 14-வது உலகக் கிண்ண உதைபந்தாட்டப்போட்டியின் 3வது நாள் ஆட்டத்தில் பிரேஸில், மே.ஜெர்மன் - செக்கோஸிலாவாக்கியா ஆசிய நாடுகள் வெற்றி பெற்றன.

### பிரேஸில் வெற்றி

'ஸி' பிரிவில் பிரேஸிலுக்கும் – சுவீடனுக்குமிடையில் நடைபெற்ற ரசிப்பான ஆட்டத்தில் பிரேஸில் வெற்றி பெற்றது.

இப்போட்டியில் இருகோஷ்டிகளும் சிறப்பாக விளையாடிய போதிலும் இடைவேளைக்கு முன் பிரேஸில் ஒரு கோலைப் போட்டு முன்னணி வகித்தது இடைவேளைக்குபின்பு, சுவீடனும் ஒரு கோலைப் போட்டு சமப்படுத்தியது. ஆட்டம் முடிவடைவதற்கு 13 நிமிடங்கள் இருக்கும்போது பிரேஸில் 2-வது கோலைப் போட்டு 2-1 கோல்கள் வித்தியாசத்தால் வெற்றி பெற்றது.

### மே. ஜேர்மனி வெற்றி

'டி' பிரிவில் மே. ஜேர்மனிக்கும் – யூக்கோஸிலாவியாவுக்குமிடையில் நடைபெற்ற போட்டியில், மே.ஜேர்மனி மிக இலகுவாக வெற்றிபெற்றது.

இப்பிரிவில் மே. ஜேர்மனிக்கு 'தலையிடியை' யூக்கோஸிலாவியா கொடுக்கக்கூடும் என எதிர்பார்க்கப்பட்ட போதிலும், மேற்படி போட்டியில், மே. ஜேர்மனி 4-1 கோல்களால் வெற்றிபெற்றது குறிப்பிடத்தககது. இப்போட்டியில் மே. ஜேர்மனி முன்னணி வீரர் லீப் பாஸ்கி கிறப்பாக விளையாடி ரகிகர்களின் பாராட்டைப் பெற்ருர்.

### அமெரிக்கா தோல்வி

'ஏ' பிரிவில் செக்கோஸிலாவியாவுக்கும், ஐக்கிய அமெரிக்காவுக்குமிடையில் நடைபெற்ற ஆட்டத்தில் செக்கோஸிலாவியா எதுவித சிரமமுமின்டு வெற்றி பெற்றது.

இப்போட்டியின் இடைவேளையின்போது செக்கோஸிலாவியா 2-0 கோல்களால் முன்னணி வகித்தது. இடைவேளையின்பின்பும் இக்கோஷ்டி அடுத்தடுத்து மூன்று கோல்களைப் போட்டது. ஆட்டம் முடிவடைவதற்கு சில நிமிடங்கள் இருக்கும்போது, அமெரிக்காவும் ஒரு கோலைப் போட்டு 5-1 கோல்கள் வித்தியாசத்தால் யூக்கோஸிலாவிடம் தோல்வியடைந்தது.

**நமது விளையாட்டு நிருபர் 'தேவா'**

### இன்றைய ஆட்டங்கள்

இன்று 'ஈ' பிரிவில் பெல்ஜியம் - தென் கொரியாவை எதிர்த்து மோதும்.

'எப்' பிரிவில் எகிப்து நெதர்லாந்து கோஷ்டியை எதிர்த்து மோதும். (வி)

# இவர்களுக்கு வேதனம் கிடைக்கவில்லையாம்

(வட்டுக்கோட்டை)

பயிலுநர் ஆசிரியர் பரீட்சை நடைபெற்று பல மாதங்களாகியும் இப்பரீட்சைக் கடமைகளில் ஈடுபட்ட ஆசிரியர்களுக்கான வேதனம் இதுவரை வழங்கப்படவில்லை என ஆசிரியர் பலர் கவலை தெரிவிக்கின்றனர்.

பயிலுநர் ஆசிரியர் போட்டிப் பரீட்சை நடைபெற்றும் இப்பரீட்சையில் அதிகபுள்ளிகள் பெற்றுக்கொண்டவர்களுக்கு நேர்முகப் பரீட்சை நடைபெற்றதும் பின்னர் நேர்முகப் பரீட்சையில் தெரிவுசெய்யப்பட்டவர்கள் பயிலுநர் ஆசிரியர்களாக நியமிக்கப்பட்டதும் தெரிந்ததே.

இருந்தும் இப்பரீட்சையில் மேற்பார்வையாளர்கள், நிரந்தர நோக்குநர்கள், சாதாரண நோக்குநர்கள், உதவியாளர்களாக பரீட்சைநிலைய அதிகாரிகளாகக் கடமையாற்றியவர்களுக்கும் இணைப்பதிகாரிகளாகக் கடமையாற்றியவர்களுக்கும் இதுவரை வேதனம் வழங்கப்படவில்லை என்றும் இவற்றைஉடனடியாக வழங்க பரீட்சைத் திணைக்களத்தினர் நடவடிக்கை மேற்கொள்ளப்படவேண்டுமெனவும் கேட்டுக்கொள்ளப்படுகின்றது. (139)

# கோரிக்கை

(புங்குடுதீவு)

நெடுந்தீவு அரசினர் வைத்திய சாலைக்கு அம்புலன்ஸ் வண்டியொன்றை தந்துதவுமாறு அப்பகுதி மக்கள் சுகாதாரத் திணைக்களத்தினைக் கோரியுள்ளனர். (101)

# வீதி புனரமைப்பு

(வட்டுக்கோட்டை)

வட்டுக்கோட்டை வீரபத்திர சிவன்கோவில் வெளிவீதி வேலைகள் புனரமைப்புச் செய்யப்பட்டு வருகின்றன.

இந்த வீதிக்கு கல், மண், மணல் முதலானவை பரவி, உறுளை பிடித்து வேலைகள் நடைபெற்றுவருகின்றது. (13')

# மட்டு -- திருமலை ரயில் இணைப்பு சேவை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு திருமலை பயணிகளுக்கான ரயில் இணைப்பு இந்தவாரம் முதல் மீண்டும் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

திருமலை - மட்டக்களப்பு ரயில் பயணிகளின் நன்மை கருதி கடந்த மாதம் ஏற்படுத்தப்பட்ட ரயில் இணைப்பு எதுவித முன்னறிவித்தலும் இன்றி திடீரென நிறுத்தப்பட்டது. இப்போது மீண்டும் இணைப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது. (121)

# உணவு மருந்தில் கலப்படம்:

## எதிர்கால சந்ததியை பாதிக்கும்

(காங்கேசன்துறை)

''உணவு, மருந்து வகைகளில் கலப்படம், மோசடி செய்வது எதிர்காலச் சந்ததியையே பெரிதும் பாதிக்கும். ஆகவே இன்றைய இளையதலைமுறையினரும் இதுவிடயத்தில் அதிக அக்கறை எடுக்கவேண்டும் இப்படியான சமூக விரோதச் செயல்களை தடுத்து நிறுத்தவேண்டும்.''

இவ்வாறு காங்கேசன்துறை நடேஸ்வரக் கல்லூரி உயர்தர வகுப்பு மாணவர்கள் மத்தியில் உரையாற்றிய யாழ். மாவட்ட உணவு, மருந்து வகைகள் கலப்படம், மோசடி கண்காணிப்பு அதிகாரி திரு த. மகாதேவன் கூறினார்.

கல்லூரி மண்டபத்தில் நடைபெற்ற உயர்தர வகுப்பு மாணவர்களுடனான கலந்துரையாடலில் அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது;

''உணவு, மருந்து வகைகளில் கலப்படம், மோசடி செய்வதைக் கண்காணிப்பதில் மாணவர்களும் பங்கு கொள்ளவேண்டும். இவ்வாறான செயல்களை கண்டுபிடித்து அவற்றை நிறுத்துமாறு ஆலோசனை கூறவேண்டும். அவ்வாறு நிறுத்தாதுவிட்டால் சுகாதார அதிகாரிகளுக்குத் தெரியப்படுத்தவேண்டும்.

''மாணவர்கள் கல்வியுடன் மட்டும் நிற்காது, இப்படியான சமூகத்திற்கு உதவும் பணிகளாலும் ஈடுபடவேண்டும்'' என்றார். (86)

# காடு வளர்ப்புக்கு 5 லட்சம் ரூபா

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட பன்முகப்படுத்தப்பட்ட வரவு-செலவுத் திட்டம் 1990 இன்கீழ் வனபரிபாலன திணைக்களத்துக்கு காடு வளர்ப்புத் திட்டத்துக்காக 5லட்சம் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

வல்லைவெளி, கல்லுண்டாய் வெளி, முற்றவெளி, சாவகச்சேரி, பருத்தித்துறை பாதையிலுள்ள வெளி, பருத்தித்துறை மருதங்கேணி பாதை வெளி ஆகியவற்றில் காடு வளர்ப்பு திட்டத்தின்கீழ் சஞ்சீவி, சவுக்கு ஆகிய மரங்கள் நாட்டட்படவிருக்கின்றன. (153)

# வெங்காயம், பருப்பு வந்து சேர்ந்தது

(கொழும்பு)

பெரிய வெங்காயம், பருப்பு ஆகியன போதியளவு விநியோகத்துக்கு வந்துள்ளது.

1,000 மெற்றிக் தொன் பெரிய வெங்காயத்துடன் கப்பல் ஒன்று கொழும்புத்துறைமுகத்துக்கு வந்துள்ளது. மற்றும் ஒரு கப்பல் 2,100 தொன் வெங்காயத்துடன் அடுத்த மாதம் வந்து சேருமென்று அறிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# துறைமுகம் ஆழமாக்கும் வேலை ஆரம்பம்

(நெடுந்தீவு)

குறிக்கட்டுவான் துறைமுகம் ஆழமாக்கும் வேலை இப்பொது ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்பாள் ஆலயஉற்சவம் ஆரம்பிக்கப்படுவதற்கு முன்னர் இவ்வேலைகள் பூர்த்தியாக்கப்பட்டுவிடும் எனத் தெரிவிக்கப்படுகின்றது. (133)

### சாவகச்சேரி

(1ம் பக்கத் தொடர்ச்சி)

வெகு விரைவில் மேற்படி இடங்களிலுள்ள அரசகாணிகள் காணியற்ற மக்களுக்கு வீடுகட்ட பயிர்ச் செய்கைக்கரக பகிர்ந்தளிக்கப்படவிருக்கிறதாக தெரியவருகிறது. (158)

### போக்குவரத்து

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

திட்டம் காரணமாக எந்த ஒரு ஊழியரும் பதவியிலிருந்து விலகுமாறு நிர்ப்பந்திக்கப்பட மாட்டார். ஊழியர்கள் சுயவிருப்பத்தின் பேரில் தமது பதவியை தொடர்வதா அல்லது ஓய்வு பெறுவதா என்பதை தீர்மானிக்க இடமளிக்கப்படும்.

சுயவிருப்பத்தின் பேரில் பதவியிலிருந்து ஓய்வு பெறுபவர்களுக்கு ஊழியர் சேமலாப கொடுப்பனவு, ஊழியர் நம்பிக்கை நிதிக் கொடுப்பனவு, பணிக்கொடை ஆகியவற்றை பெற உரித்துடையவராவர்' என்றார். (அ)

### ஏழை மக்களின்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்தார்,

அவர் மேலும் பேசியதாவது;-

மக்களைப் பலப்படுத்துவதன் மூலமேநாமும் பலம் பெறமுடியும் ஒருசிலர் வெறும் சுலோகங்கள் மூலம் அல்லது மக்கள் மத்தியில் பீதியைப் பரப்புவதன் மூலம் ஆளலாம் அல்லது ஆட்சியைக் கவிழ்கலாம் என்று நினைக்கிறார்கள். இவர்களைப் போன்றவர்களால் பரப்பப்பட்ட பீதி தற்போது நீக்கப்பட்டுள்ளது.

பரிசுத்தமான நிர்வாகத்தை கிராம சேவையாளர் என்ற அடிமட்டத்திலிருந்து அமைச்சர் வரையிலான உயர் மட்டம் வரை உண்மை, நேர்மை, திறமையாகச் செயற்படுத்த வேண்டும். இத்தகைய நேர்மையான செயல் வீரர்களைக் காப்பாற்ற நான் எப்போதும் தயாராக உள்ளேன் என்றார். (அ)

### சர்வதேச

(1ம் பக்கத் தொடர்ச்சி)

டம்பர் மாதத்துடன் இலங்கைக்கான சபையின் செயலாளர் திரு. அனி ரணசிங்க ஓய்வு பெறுவதுடன் சபை அலுவலகமும் மூடப்படவுள்ளது. சபையின்புதிய அலுவலகத்தை வேறு எந்த நாட்டில் திறப்பதென்றும் தற்போது ஆலோசிக்கப்பட்டுவருகிறது. (சி)

### ஜீ. சி. ஈ.

(1ம் பக்கத் தொடர்ச்சி)

தொடர்ந்து உயர் கல்வி கற்கும் வாய்ப்பை இழக்கும் மாணவர்கள், தொழில் நுட்பத் தேர்ச்சி நற்சாட்சிப் பத்திரத்தை அடிப்படையாகக் கொண்டு தொழில் நுட்பக் கல்லூரிகளில் சேர்ந்து கல்வி கற்று, தொழில்நுட்பப் பட்டதாரியாக வெளியேற வாய்ப்பு உருவாக்கப்பட உள்ளது.

80 வீதமான மாணவர்கள், ஜீ. சி. ஈ. (சாதாரண) பரீட்சைக்கு மேல் கல்வி பயில வாய்ப்புக் கிடையாது என்றும் அவர்களை மையமாகவைத்தே இத்திட்டம் அமுல்செய்யப்படுமென்றும் அமைச்சர் அத்துலத் முதலி அண்மையில் கொழும்பில் நிகழ்ந்த கருத்தரங்கில் தெரிவித்தார். (அ)

# இணக்க சபைகள் அங்குரார்ப்பணம்

(பண்டத்தரிப்பு)

மானிப்பாய் பிரதேசத்தில் இணக்கசபைகள் அண்மையில் அங்குரார்ப்பணம்செய்து வைக்கப்ப்ட்டுள்ளன.

மானிப்பாய், தாவடி, இணுவில், நவாலி, ஆனைக்கோட்டை, கொக்குவில், வண்ணார்பண்ணை ஆகிய பிரிவுகளை உள்ளடக்கிய நான்கு இணக்க சபைகள் பொதுமக்கள் முன்னிலையில் அமைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

தமிழீழ விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி மானிப்பாய் பிரதேச பொறுப்பாளர் திரு. சங்கர் தலைமையில் நடைபெற்ற இந்த இணக்க சபைகளின் அங்குரார்ப்பணக் கூட்டங்களில் இணக்க சபைகளின் செயற்பாடு பற்றியும் கடமைகள் பற்றியும் பூரணமாக விளக்கங்கள் வழங்கப்பட்டன. (72)

புள்ளிவிபரத் திணைக்களம்

# மக்களின் வருமானம்பற்றிய அளவீடு ஒன்றை மேற்கொள்ளும்

(யாழ்ப்பாணம்)

கொள்கைத் திட்டமிடல் அமுலாக்கல் அமைச்சின் கீழ் உள்ள தொகை மதிப்புப் புள்ளிவிபரத் திணைக்களம் நாட்டு மக்களின் வருமானம், செலவுகள், பொருளாதார நிலை போன்றவற்றைப் பற்றிய விபரங்களைச் சேகரிப்பதற்காக நாடு முழுவதிலும் அளவீடு ஒன்றை நடாத்துவதற்கான ஆயத்தங்களை செய்திருக்கிறது.

இந்த அளவீடு தேசிய குடித்தன அளவீடு நிகழ்வுத் திட்டத்தின் கீழ் நடாத்தப்படும்.

இந்த அளவீட்டுக்காக நாடு முழுவதையும், பிரதிபலிக்கக்கூடியதாக 12,500 மாதிரி வீட்டுக் கூறுகள் தெரிவு செய்யப்படும்.

தெரிவு செய்யப்பட்ட இவை ஆறுமாத காலத்துக்கு சமமாகப் பிரிக்கப்பட்டு அளவீடு நடாத்தப்படும்.

தெரிவு செய்யப்யட்ட குடித்தனங்களில் இருந்து அளவீட்டுக்காக விபரங்களைச் சேகரிக்கும் வேலை கடந்த மே மாதத்தில் ஆரம்பித்து தொடர்ச்சியாக ஆறுமாத காலத்துக்கு நடைபெறவிருக்கிறது.

குடித்தன அங்கத்தவர்களின் குணதிசையங்கள், குடித்தனத்தின் வருமானம், செலவு போன்ற தேசிய திட்டமிடற் காரணங்களுக்காகக் தேவைப்படும் விபரங்களைச் சேகரிப்பதே இந்த அளவீட்டின் நோக்கமாகும். (153)

### பாடசாலைகளை

(1ம் பக்கத் தொடர்ச்சி)

வேண்டும்'.

இவ்வாறு யாழ். மாவட்டக் கல்விப் பணிப்பாளர் திரு. இரா. சுந்தரலிங்கம் அண்மையில் யாழ்ப்பாண மத்திய கல்லூரி மண்டபத்தில் நடைபெற்ற பாடசாலை அதிபர்கள், கட்டட ஒப்பந்தக்காரர்கள் கூட்டத்தின் மத்தியில் உரையாற்றும்போது தெரிவித்தார்.

திரு. சுந்தரலிங்கம் பேசுகையில் மேலும் கூறியதாவது:

ஆசிய அபிவிருத்தி வங்கி தருவது போல் அரசாங்கம் தராது: சந்தர்ப்பத்தை உரிய வேளையில் பயன்படுத்தாதுவிடின் வந்த பணம் திருப்பிவிடும்' என்றார். (133)

## மரண அறிவித்தல்

### A. E. இரட்ணசாமி J. P.

(சங்கானை)

A. E. இரட்ணசாமி 11 - 6 - 90ல் காலமானார். அன்னார் கட்டுடையில் வசித்துக் காலஞ்சென்றவர்களான ஆசிரியர்கள் M.A. அருணசலம், மனைவி ஆச்சிமுத்து அவர்களின் சிரேஷ்ட புத்திரனும், சங்கானையில் வசித்துக் காலஞ்சென்றவர்களான மலாயன் பென்ஷனியர் டி. கே. நவரத்தினம் மனைவி தையல்முத்துவினது மருமகனும், காலஞ்சென்ற ஜோய்ஸ் நேசமலரின் அன்புக் கணவருமான A. E. இரட்ணசாமி J.P. (இளைப்பாறிய பாடசாலை அதிபர்) காலமானார். அன்னார் R. S. நேசராஜா (இலங்கை வங்கி யாழ்ப்பாணம்), இரத்தினமலர், R. R. இரட்ணராஜா (வரணி பண்ணை) ஆகியோரின் அன்புத் தகப்பனாரும், ரூபா, ஜெயச்சந்திரன் (குவைத்), பாலமுகி ஆகியோரின் அன்பு மாமனாரும் கட்டுடையில் வசிக்கும் திருமதி R. S. மயில்வாகனம், அண்மையில் காலமான கொக்குவில் இளைப்பாறிய உப அதிபர் A. R. இராஜநாயகம் ஆகியோரின் அன்புச் சகோதரரும், நெறூஜன், சுஜீவன், ரேபேக்கா தர்மினி, ஜேன்ரம்மியாவின் அன்புப் பேரனுமாவார். அன்னாரின் பிரேத சேம ஆராதனை அவரது இல்லத்தில் இன்று (12-6-90) செவ்வாய்க்கிழமை பி. ப. 3-00 மணிக்கு நடைபெற்று பூதவுடல் நல்லடக்கத்திற்காக சங்கானை கிறிஸ்தவ சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும்.

தகவல்:- R. S. நேசராஜா.

Joy Cottage,
Church Road,
CHANKANAI.

(C- 3977)

# விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன

[மானிப்பாய்]

விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் வேண்டுகோளுக்கிணங்க, யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள அனைத்துத் தொண்டர் ஆசிரியர்களிடமும் கீழ்க்காணும் முறைப்படி தொண்டர் ஆசிரியர் சங்கம் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

பெயர் விலாசம், கற்பித்த பாடசாலையின் பெயர், பிறந்த திகதி, தகைமை, சேவைக் காலம், நியமனக் கடித இலக்கம், கற்பித்தபாடம், குறிப்பு.

பாடசாலையில் இருந்து சேவை நீக்கம் செய்யப்பட்டவர்கள் வேறாகவும், தொடர்ந்தும் சேவையில் உள்ளவர்கள் வேறாகவும் கோரப்படுகிறது. சேவையிலிருந்து நீக்கம்செய்யப்பட்டவர்கள் குறிப்பு என்னும் இடத்தில் நீக்கப்பட்டதற்கான காரணம், நீக்கப்பட்ட ஆண்டு ஆகியவற்றுடன் விளக்கமாக அனுப்பப்படல் வேண்டும்.

விண்ணப்பங்கள் அனைத்தும் பதிவுத் தபாலில் செல்வி தே. மாலா, 85, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு அனுப்பப்படல்வேண்டும். அனுப்பும் விண்ணப்பங்கள் யாவும் 16-6-1990ம் திகதிக்கு முன் அனுப்பப்படல் வேண்டும்.

# காணி வழங்கப்பட்டது

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை உதவி அரசாங் அதிபர் பிரிவிலுள்ள கற்கோவளம் கிராமத்தில் அண்மையில் காணியற்ற 166 பேருக்கு வீடு அமைப்பதற்கு காணி பகிர்ந்தது அளிக்கப்பட்டது.

கற்கோவளத்தில் பகிர்ந்தளிக்கப்பட்ட காணிகளில் கொத்தணி வீடமைப்புத் திட்டம் உருவாக்கப் படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக தெரிய வருகிறது. (153)

### சூரிய சக்தியின்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

சத்து 50 ஆயிரம் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

காரைநகர் வலந்தலையில், சுழிபுரம் ஊரியில், மாதகல் இலசடியில், காங்கேசன்துறை ஊறணியில் கடற்றொழிலாளர்களுக்கு பயன்படுவதற்காக தங்குமிட அறைகள் அமைக்கபபடவிருக்கிறது. இதற்கு 3 லட்சம் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. (153)

# வட்ட அவை தெரிவு

(யாழ்ப்பாணம்)

இன்று செவ்வாய்க்கிழமை மாலை 3-00 மணிக்கு நல்லூர் உதவி அரச அதிபர் பிரிவுக்கான வட்ட அவைத் தெரிவு கந்தர்மடம் சைவப்பிரகாச வித்தியாசாலையில் இடம்பெற உள்ளது.

நாளை புதன்கிழமை மாலை 2-00 மணிக்கு கோப்பாய் உதவி அரசாங்க அதிபர் பிரிவு வட்ட அவைத் தெரிவு நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரியிலும், அதே தினம் மாலை 4-00 மணிக்கு தெல்லிப்பழை உதவி அரச அதிபர் பிரிவுக்கான வட்ட அவைத் தெரிவு தெல்லிப்பழை யூனியன் கல்லூரியிலும் இடம் பெறவுள்ளது.

சிற்றூரவை உறுப்பினர்கள் அனைவரும் தெரிவின்போது சமுகமளித்து, ஒத்துழைக்குமாறு வலிகாமம் பிரிவு விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியினர் கேட்டுக்கொள்கின்றனர்.

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி, 68-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1990-ம் ஆண்டு ஆனி மாதம் 12-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number B/100306/81.